# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 25. தொலை பேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2003, தை 2உ (23-1-72) ஞாயிறு 1391 துல்கஃதா 28 புத்தகம் 25 இதழ் 9


# சமஷ்டியா? தனிநாடா?

## தமிழரசு மாநாடு முடிவு செய்யும்!

தமிழினம் தொடர்ந்தும் இணைப்பாட்சிக்குப் பட்ட சுதந்திரத் 'தமிழரசுக்காகப் போராடுவதா? அல்லது சுயேச்சையான சுதந்திரத் தமிழ் நாட்டுக்கு போராடவேண்டுமா?

—இந்தக் கேள்விக்கு எதிர் வரும் தமிழரசுக்கட்சியின் மாநாட்டில் விடை காணப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

'தமிழரசுக் கட்சி தனது சமஷ்டிக் கொள்கையை இன்னும் கைவிட்டு விடவில்லை. கட்சி மாநாட்டின் மூலமே அக்கொள்கையை மாற்றியமைக்க முடியும். கட்சி சமஷ்டிக் கொள்கையை கைவிட்டு தனிநாடு கொள்கையை ஏற்றுக்கொள்ளுமா என்பது அந்தக மாநாட்டுக்குப் பின்னர் தான் தெரியும்.

'அரசாங்கம் தமிழர் தொடர்பாகவும் கடைப்பிடிக்கும் கொள்கைகள் தமிழர்களை தனிநாடு கோர நிர்ப்பந்திக்கின்றன, என்று மாத்திரமே என்னால் இப்போது கூற முடியும்.'

—இவ்வாறு தமிழரசுத் தந்தை செல்வா அவர்கள் விடுத்த அறிக்கையொன்றில் தெளிவுபடுத்தியுள்ளார்.

## ஈழத் தமிழர் நீதி பெற்றிட

# இந்திய அரசு உதவ வேண்டும்!

## வங்கத்தில் நடைபெற்ற அதே கொடுமை ஈழத்திலும் நடைபெறுகிறது!

### அறிவியக்கப் பேரவை அறிக்கை!

"கிழக்கு வங்கத்திலே பாகிஸ்தான் நடத்திய கொடுமைகளுக்கு இணையான பல கொடுமைகளை இலங்கை அரசு தனது தமிழ் மக்களுக்கு செய்து வருகிறது. அந்த மக்களின் மொழியுரிமை, படிப்புரிமை, தொழில் உரிமை என்னும் ஒவ்வொன்றையும் திட்டமிட்டு பறித்துவருகிறது இலங்கை அரசு. இந்த நிலை நீடித்தால் தமிழ் இலங்கையிலும் ஒரு வங்கப் போர்க்களம் உதயமாகிவிடுமோ என்றே அஞ்சவேண்டியுள்ளது. எனவே கிழக்கு வங்கத்தில் பொங்கியெழுந்த உணர்ச்சிக்கு தோள் கொடுத்த இந்திய மக்கள் உரிமைக்காகப் போராடும் இலங்கைத் தமிழர்களுக்கும் கைகொடுக்கவேண்டும்."

—இவ்வாறு தில்லிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் சாலை இளந்திரையன் அவர்களை தலைவராகக் கொண்ட அறிவியக்கப் பேரவை இந்திய அரசுக்கும் இந்திய மக்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

(7-ம் பக்கம் பார்க்க)

## பிள்ளை தந்த புள்ளி விபரம்!

"தமிழர்கள் கல்வியில் முன்னேறுகிறார்கள் என்று கூறுவது அபத்தமானது. பொதுவில் தமிழர்கள் எல்லோருமே பாடசாலைகளில் இருக்கிறார்கள் என்று கருதப்படுகிறது. இலங்கைத் தமிழர்களில் 38 சத விகிதத்தினருக்கு கல்வி வசதி இல்லை. 50 சத விகிதத்தினர் ஆரம்பக் கல்வி பெறுகிறார்கள். தாழ்ந்த பிரதேச சிங்களவர்களுக்கு கிடைக்கும் கல்வி அளவுக்கு குறைவானதே இத்தொகை.

"இங்குள்ள மலைநாட்டுத் தமிழர்களை எடுத்துக்கொண்டால் 60.5 சத விகிதத்தினரும் கல்வி வசதி அற்றவர்களாக இருக்கிறார்கள். 35.9 சத விகிதத்தினருக்குத்தான் ஆரம்பக்கல்வி கிடைக்கிறது. ஜி. சி. ஈ, எஸ் எஸ் சி. சித்தியெய்துபவர்களின் தொகை இல்லை என்றே கூறலாம்."

— நாடாளுமன்றத்தில் சி. கதிரவேற்பிள்ளை (பல்கலைக் கழக திருத்த மசோதாவின் மீது பேசியது.)

## யாழ்நகரில் யாயாகான்!

கடந்த வாரம் அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா யாழ்ப்பாணம் சென்றிருந்தார்.

'வங்கதேச வெற்றி விழாவை யாழ்ப்பாணத்தில் கொண்டாடி மகிழ்ந்தவர்கள் வங்கதேசம் போல இங்கும் தமிழர்களுக்கென தனி நாடு அமைக்கப் போவதாக பேசித் திரிகிறார்கள் என அறிகிறேன். இதை அரசாங்கம் சகித்துக் கொண்டிராது என்று அவர்களை எச்சரிக்கிறேன். இலங்கை ஒரே நாடு. இலங்கையைத் தமிழ் நாடு சிங்கள நாடு என்று இரண்டாகப் பிரிக்க நினைப்பது சுத்த பைத்தியக்காரத்தனம். பிரிவினைவாதிகளுக்கு இந்நாட்டில் இடமில்லை.'

இவ்வாறு யாழ் நகரில் கூறிவிட்டு திரும்பியிருக்கிறார் பீலிக்ஸ்!

# துணைசேறு ஏடுகளின் குல்மால்

அவசரகால நிலையைப் பயன்படுத்தி தமிழரசுக் கட்சியை எப்படியாவது தடை செய்துவிடவேண்டுமென்ற நோக்குடன் துணைசேறு பத்திரிகைகள் (தினபதி, தவசு, சன் கும்பல்) குல்மால் வேலைகளில் ஈடுபட்டுள்ளன.

வங்காளதேச மக்களைப் பின்பற்றி, தமிழரசுக்கட்சியும் வெளிநாட்டு இராணுவ உதவி பெற்று ஒரு தனித் தமிழ் நாட்டை அமைக்கப் போராடவிருப்பதாக தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் காங்கேசன் துறையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசியதாக துணைசேறு பத்திரிகைகள் அப்பட்டமான பொய்ச்செய்தியொன்றை வெளியிட்டு நாட்டு மக்களைப் பரபரப்பிலாழ்த்தின.

தனித்தமிழ் நாட்டுக்காகப் போராடியே தீரவேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகி— தனிநாட்டுக்கு போராடுவ

(7-ம் பக்கம் பார்க்க)

## முஜிபர் தரும் முத்துமொழி!

"பொய்க்கும் உண்மைக்குமிடையில் நடைபெறும் போராட்டத்தில் முதல் கட்டத்தில் பொய்தான் வெற்றி பெறும் என்பதும் உண்மை பின்னர் தான் வெற்றி பெறும் என்பதையும் நான் அறிந்திருந்தேன். அதுவே என்னைத் திடமனத்துடன் வைத்திருந்தது."

—வங்க பந்து ஷேக் முஜிபர்.

## சோஷலிசமாம் சோஷலிசம்...!

மரவரித்திணைக்களப் பரிசோதகர் பதவிக்காக அண்மையில் கொழும்பில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்காக இலங்கை முழுவதிலுமிருந்து கொழும்பு தொழில் நிலையத்தால் தகுதியுள்ள வாலிபர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். தனித் தமிழ் நாடுகளிலிருந்தெல்லாம் தமிழ் இளைஞர்களும் மேற்படி நேர்முகப் பரீட்சைக்காக வந்திருந்தனர்.

ஆனால் கொழும்பு தொழில் நிலையத்தால், நேர்முகப் பரீட்சைக்காக வழங்கப்பட்ட அட்டை தனிச்சிங்களத்திலேயே எழுதப்பட்டி

(7-ம் பக்கம் பார்க்க)

## சோஷலிசமாம் சோஷலிசம்...!

கடந்த வருட இறுதியில் இராணுவத்தில் 'மெக்கானிக்' ஆகக் கடமையாற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. பல்லாயிரக் கணக்கானோர் விண்ணப்பித்திருந்தனர். இந்த விண்ணப்பங்களில் சிங்களத் தகுதி சான்றிதழ்கள் இல்லாத விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டு விட்டனவாம். சிங்களம் தெரியாதவன் இந்நாட்டில் உத்தியோகம் பெற முடியாதா? இதற்குப்பெயர் தான் சோசலிசமா?

# இந்துப் பல்கலைக் கழகத்தை தமிழ் காங்கிரஸ் கைவிட்டது!

இலங்கை முழுவதற்குமாக ஒரேயொரு பல்கலைக் கழகம் அமைக்கும் கல்வி அமைச்சரின் இலங்கைப் பல்கலைக்கழக திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் தமிழ் காங்கிரஸ் பா. உ. க்கள் ஆதரித்து வாக்களித்ததன் மூலம் தமது கட்சியின் இந்துப் பல்கலைக் கழகக் கோரிக்கையைக் குழிதோண்டிப் புதைத்து விட்டனர்.

பல்கலைக்கழக மசோதா மீது பேசிய திரு. ஆ. தியாகராசா, தமிழ் காங்கிரஸ் சார்பில் அம்மசோதாவை வரவேற்பதாக கூறியுள்ளார்.

(7-ம் பக்கம் பார்க்க)

## சோசலிச அரசாங்கம் பற்றி சோசலிஸ்டுகள் சொன்னவை!

கூட்டுறவில் ஊழலாம்.

"இலங்கையில் உள்ள கூட்டுறவு இயக்கங்களின் ஊழலுக்கும் ஒழுங்கீனத்துக்கும் குறைவே இல்லை"

—வி. பொன்னம்பலம்
வீரகேசரி 17-2-1972

தமிழ் மங்குகிறதாம்.

"இலங்கையில் இன்றுள்ள அரசாங்கத்தின் கீழ் தமிழ் அழிகிறது — இல்லை — மங்கிக்கொண்டு வருகிறது!"

—இரா. சிவலிங்கம்

(கொழும்பு அரசாங்க எழுதுவினைஞர் சங்க மண்டபத்தில் 9-1-1972 இல் நடைபெற்ற புதிய கல்வித் திட்டம் பற்றிய கருத்தரங்கில் கூறியது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்



ச. தமிழ்ச் செல்வன்,
பருத்தித்துறை.

கே: தந்தை செல்வா கடைசி மூச்சு இருக்கும் வரை எதைப் பற்றி சிந்தித்துக்கொண்டிருப்பார்?

ப: தமிழினத்தின் விடுதலையைப் பற்றி என்பதை சொல்லவும் வேண்டுமா?

ஃ

பே. நீக்கிலாஸ்,
சில்லாலை.

கே: திரு: குமாரசூரியர் இனி என்ன செய்வார்?

ப: சிறிமாவுக்குத்தான் வெளிச்சம்!

ஃ

க. செல்வராசா,
கோண்டாவில்.

கே: நாங்கள் தமிழில் போடுகிற கடிதம் எல்லாம் கொழும்புக்கு வருவதில்லையா?

ப: தமிழில் முகவரியிடப்பட்ட 'லண்டன் முரசு' பத்திரிகை இங்கிலாந்திலிருந்து இங்குவந்து சேரும்போது உங்கள் தமிழ் கடிதம் எப்படி வராமல் விடும்? அச்சமின்றி தமிழிலே துணிந்து எழுதுங்கள்!

ஃ

க. இராசேந்திரம்,
கோண்டாவில்.

கே: வங்காளதேச கொடியும் எங்கள் தமிழரசுக் கட்சி மூவர்ணக் கொடியும் எதைக் குறிக்கிறது?

ப: வங்கக்கொடி வங்க இனம்பெற்ற சுதந்திரத்தையும், நம் தமிழரசுக்கொடி, தமிழினம் எதிர்காலத்தில் பெறவேண்டிய சுதந்திரத்தையும் நினைவூட்டுகிறது!

ஃ

க. சண்முகநாதன்,
கரும்பிராய்.

கே: தமிழரசுக்கட்சி இரண்டாக பிளவுபடப் போகிறது என்று எழுதியிருக்கிறதே கம்யூனிஸ்ட் ஏடு புதுயுகம்?

ப: தமிழரசுக்கட்சி தனது பிரச்சினையை தானே தீர்த்துக்கொள்ளும் - அடுத்தவன் வீட்டைச் எட்டிப் பார்ப்பதை விடுத்து கம்யூனிஸ்டுகள் முதலில் தமது கட்சி பிளவுபடுவதை தவிர்ப்பதில் கவனம் செலுத்தட்டும். ஐ. மு. அரசாங்கத்துடன் உள்ள தொடர்புகளைத் துண்டித்துக்கொண்டு கம்யூனிஸ்ட் கட்சி உடனே வெளியேற வேண்டுமென்கிறாராம் டாக்டர் விக்கிரமசிங்கா. பீட்டர் கெனமனோ, வெளியேறினால் மந்திரி பதவி போய்விடுமென்ற அச்சத்தில் வெளியேற மறுக்கிறாராம். இதனால் கம்யூனிஸ்ட் கட்சியே இரண்டாக உடையப்போகிறதென்று பேசிக்கொள்ளப்படுகிறதே!

கே: இந்தியாவிலிருந்து தமிழ்ப் பத்திரிகைகள் எதுவும் இங்குவரக் கூடாதென்றும் அப்போதுதான் இங்கு தமிழ் எழுத்தாளர்கள் முன்னேற முடியும் என்றும் கூறியிருக்கிறார் 'திரிபுவாத கம்யூனிஸ்ட் வி. பொன்னம்பலம் இதற்கு உங்கள் பதில் என்ன?

ப: முதலில் இந்தக் கருத்தை வெளியிட திரு. பொன்னம்பலத்துக்கு எவ்வித அருகதையுமில்லை. ஏனெனில் அவர் ஒரு பத்திரிகையாளரோ, அல்லது தமிழ் எழுத்தாளரோ அல்லர். தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டால்தான் இங்கு எழுத்தாளர்கள் தலையெடுக்கமுடியும் என்று கூறுவது நமது எழுத்தாளர்களின் ஆற்றலையும திறமையையும் அவமதிப்பதாகுமென்பதே என் கருத்து. போட்டியிட்டு இலக்கியம் வளர்க்கும் ஆற்றல் நம்மவரிடம் நிரம்ப உண்டு. தமிழக ஏடுகள் அனைத்தும் தடை செய்யப் படவேண்டுமென்று கூச்சலிடும் கொம்யூனிஸ்ட் குஞ்சுகள் தமிழ்நாட்டு ஜனசக்தியையும், தாமரையையும், ஆராய்ச்சியையும் . மட்டும் வெற்றிலைவைத்து இங்கு வரவழைப்பதேன்?

ஃ

சி. நடராசா,
மீசாலை வடக்கு.

கே: சிமோலுக்கும், மாட்டனுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமையென்ன?

ப: இருவரும் தமிழ் மக்களுக்கு தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டுவிட்டார்கள்; இது ஒற்றுமை. முன்னவர் நீலச்சட்டைக்குள் புகுந்துவிட்டார்; பின்னவர் நீலச்சட்டைக்கு இப்போது ஆடர் கொடுத்திருக்கிறாராம்! இது வேற்றுமை!

ஃ

ரி. கே. லிங்கம்,
பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம்.

கே: பல இன மக்கள் வாழும் ஒரு நாட்டின் அரசியல் திட்டம் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்?

ப: ஒவ்வொரு இனத்துக்கும் சுயாட்சி அளிக்கும் சமஷ்டி அரசியலமைப்புத் திட்டமாக இருக்கவேண்டும்!

ஃ

சி. தெய்வேந்திரன்,
வவுனியா.

கே: இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி பாராளுமன்றஉறுப்பினர்கள் சிலர் கல்வி மந்திரியைப் போற்றுகிறார்கள் சிலர் தூற்றுகிறார்கள். இவ்விடயத்தில் கட்சியின் நிலை என்ன என்பதை விபரமாகத் தருக?

ப: தமிழரசுக்கட்சி மெம்பரது பாராளுமன்ற உறுப்பினர்களின் சட்டைப் பைக்குள் இருப்பது அல்ல; கட்சியின் கருத்தைப் பாராளுமன்றத்தில் எதிரொலிப்பது தான் பா. உ.க்களின் கடமை. கல்வி மந்திரியின் நடவடிக்கைகள் தமிழினத்தை அழித்தொழிப்பதாக இருக்கிறது என்று தமிழரசுக் கட்சிப் பொதுச்சபை காரசாரமாகக் கண்டித்துள்ளது. இதுவே கட்சியின் கருத்து. சில தமிழரசு பா. உ.க்கள் கல்விமந்திரியைப் பாராட்டியிருக்கிறார்கள் என்றால் அவர்கள் தனிப்பட்ட முறையில் மந்திரியை அணுகி ஏதாவது நன்மை பெற்றிருக்கலாம். அதனால் முகஸ்துதிக்காக அப்படிப் பாராட்டியிருக்கலாம். எப்படியிருந்தாலும் தமிழினம் என்ற அடிப்படையில் கல்வி மந்திரியைக் கிஞ்சித்தும் பாராட்ட முடியாது என்பது எனது கருத்து!

ஃ

ச. ஜெகநாதன்,
மட்டக்களப்பு.

கே: தந்தைசெல்வா கல்வி மந்திரியைக் கண்டித்துப் பாராளுமன்றத்தில் பேசிய பின்னர் மட்டுநகர் முதல்வர் இராசதுரை பாராட்டிப் பேசியிருக்கிறார். ஏன்?

ப: ஏன் என்ற கேள்விக்கு அவர் இன்றுவரை விடையளிக்கவில்லை!

கே: தமிழரசு மாநாட்டுக்கு நாம் இங்கிருந்து செல்ல நினைத்துள்ளோம். அங்கு சென்றால் தங்கும் வசதி தேவை. இதற்கு ஒழுங்கு செய்ய யாருக்கு அறிவிக்க வேண்டும்?

ப: அட்டலேறு [illegible] தரம், 25 இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுதுங்கள்.

ஃ

செ. அருள்மோகன்
தையிட்டி
காங்கேசன் துறை

கே: செ. இராசதுரையைப்பற்றி சில வரிகள்...?

ப: தமிழரசுக் கட்சியிலிருந்து வரலாற்றுறை நவரத்தினத்துக்கு ஆசை காட்டி வெளியே இழுத்தெடுத்து அரசியலில் செல்லாக்காசாக்கி இன்று நடுத்தெருவில் விட்டுள்ள தினபதி சிவநாயகம், இராசதுரையையும் கட்சியிலிருந்து பிரித்து விடுவதற்கு பல முறை சூழ்ச்சி செய்தும் இராசதுரையின் உறுதியான போக்கால் மூக்கறுபட்டு வெட்கிப்போனவர். இப்போது மீண்டும் இராசதுரைக்கு வலை வீசுகிறார் தினபதி சிவநாயகம். இந்த வலைக்குள்ளும் இராசதுரை சிக்கிவிட மாட்டாரென்று நம்புகிறேன்.

ஃ

செல்வம்
மட்டுநகர்

கே: மட்டுநகரைச்சேர்ந்தவரும் தமிழரசுக்கட்சியின் துணைச்செயலாளர்களில் ஒருவருமான திரு. பாலசிங்கம், மட்டுநகர் நகரசபைத்தேர்தலில் இராசதுரையுடன் போட்டியிட்டு மண் கவ்வியவர் என்று தினபதியார் கிண்டல் செய்திருக்கிறாரே...?

ப: வடக்கு, கிழக்கு என்று தமிழினத்தை கூறுபோட்டுப் பிரிக்கும் தினபதியாரின் சதிகளை வன்மையாக எதிர்ப்பவர் மட்டுநகரின் கொள்கை வீரர்களில் ஒருவரான திரு. பாலசிங்கம். அவரைத் திட்டாமல் தினபதியார் போற்றவா செய்வார்? இராசதுரையுடன் நகர சபைத் தேர்தலில் போட்டியிட்டாலும் பாராளுமன்றத்தேர்தல்களில் எல்லாம் சொந்த மனஸ்தாபங்களை மறந்து இராசதுரையின் வெற்றிக்காக ஓடாக உழைத்தவர் திரு. பாலசிங்கம். இது ஒன்றே அவரது கட்சிப்பற்றுக்கும் கொள்கை வெறிக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறதல்லவா?

கே: அறப்போரணித் தலைவர் ஆர். டபிள்யூ அரியநாயகம் என்ன சொல்கிறார்?

ப: வடக்கு, கிழக்கு என்று தமிழ் மக்களையும் தமிழரசுக் கட்சியையும் பிரித்தழிக்க எண்ணும் முடக்கு வாதிகளின் கொட்டத்தை அடக்கியே தீருவேன் என்று கர்ஜிக்கிறார்!

ஃ

"நிபனபதி"
செட்டித்தெரு, கொழும்பு.

கே: ஈழத்தில் இலக்கிய துறை இன்னும் நல்ல வளர்ச்சியடையவில்லை என்கிறேன்; தங்களின் கருத்தென்ன?

ப: இலக்கியத்துறை வளர்ச்சியடையா விட்டாலும் தம்மை இலக்கிய சிருஷ்டிகர்த்தாக்கள் என்று கூறிக்கொள்வோரிடையே பொறாமையும் எரிச்சலும் மட்டும் எக்கச்சக்கமாக வளர்ந்து போய் கிடக்கிறதே.

ஃ

எஸ். புவனநாயகி,
வவுனியா.

கே: 'பொன்னுன நேரத் [illegible] வைப்பதே தொடர்பு வைக்காதே—எனக்கூறும் சுதந்திரன் துரோகிகளை பற்றி தங்கள் கருத்து என்ன?

ப: எதில் பற்று வைக்காதே என்று மற்றவர்கள் தடுக்கிறார்களோ அதன் மீது தான் பற்று அதிகரிக்கும். ஆகவே சுதந்திரனைப் படிக்காதே என்று கூறுபவர்கள் மறைமுகமாக சுதந்திரன் படிக்கும் ஆர்வத்தை மக்களிடம் தூண்டிவிடுகிறார்கள்: எனவே சுதந்திரன் எதிர்ப்பாளர்கள் வாழ்க என்று வாழ்த்துகிறேன்.

ஃ

சிவா செல்லையா,
கோதண்டர் நொச்சிக்குளம்
வவுனியா.

கே: மனிதனைப் படைத்த இறைவன் கவலையையும் படைத்தான். ஆனால் அக் கவலைகள் தோன்றியவுடன் மரணத்தையும் ஏன் படைத்திருக்கக் கூடாது?

ப: கவலைகள் தீரும்போது ஏற்படும் நிம்மதியையும் மனிதன் அனுபவிக்க வேண்டுமென்பதற்காக!

ஃ

நா: கனகரெட்ணம்,
மே/பா சின்னத்துரை,
கொம்மாதுறை,
செங்கலடி.

கே: வங்கத் தலைவர் முஜிபிருக்கு சிறைவாசம் பாகிஸ்தான் அரசு அளித்ததுபோல் தந்தை செல்வாவையும் இலங்கை அரசு சிறையில் தள்ளுமா நமது போராட்டம் தொடங்கினால்?

ப: அப்படிச் சிறைச்சாலை செல்ல வேண்டியேற்பட்டால் அதற்கு எப்போதுமே தயாராக இருக்கிறார் தமிழரசுத் தந்தை!

ஃ

பா: இருதயமனோகரன்,
சற்கோட்டை,
அல்வாய்,

கே: 'சமஷ்டி' கிடைக்குமென்ற நம்பிக்கை தங்களுக்கு உண்டா?

ப: நம்பிக்கையின் அடிப்படையில்தானே உலகமே இயங்குகிறது!

ஃ

எம். சீ. எம். றாபீன்கான்,
67, ஆண்டியாக் கடவத்தை,
கம்பளை.

கே: தமிழ்மொழிக்கு நியாயம் தர மறுக்கும் இந்த நாட்டில் உரிமைப் போராட்டம் நடத்துவதற்கு நாம் முற்படுவோமா?

ப: மதத்தைவிட மொழியே பெரிது என்ற உணர்வுடன் வங்கத் தலைவர் ஷேக் முஜிபர் ரகுமானின் பின்னே வங்க மக்கள் அனைவரும் திரண்டதுபோல — தந்தை செல்வாவின் பின்னர் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் திரண்டால் நாமும் போராடி நமது உரிமைகளை வென்றெடுக்கலாம்!!

வெட்டிஒட்டப்பட வேண்டிய முகவரி—
திருவாளர் குயுக்தியார்,
மே/பா: சுதந்திரன்
194, ஏ- பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12

# 'குருவிச் சாத்திரி' தினபதியாருக்கு ஒரு கதை!

'குருவிச்சாத்திரி' தினபதி' சிவநாயகத்துக்கு தன்னைத் தானே புகழ்ந்துகொள்வதில் தனிப் பெருமையுண்டு. மற்றவர்கள் புகழாவிட்டால், தன்னைத்தானாவது புகழ்ந்துகொண்டுதானேயாக வேண்டும்!

"தினபதி சொன்னால் சொன்னதுதான்" என்று டம்ப பெருமையடித்துக் கொள்வதில் இந்தக் குருவிச் சாத்திரிக்கு ஒரு தனி அலாதி ஆவல்! தினபதி சொல்லியும் நிறைவேறாமல் போனவற்றின் பட்டியலை நாம் தந்தால், தினபதியார் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாவாரா என்று கேட்கிறோம். அப்படிச் செய்வாரானால் பட்டியல் போட்டுக்காட்டுகிறோம்! இதோ ஒரு சில கேள்விகள்:—

(1) மார்ட்டினுடன் சேர்ந்து நான்கு தமிழரசு எம். பீக்கள் கட்சியைவிட்டுப் போகப் போகிறார்கள் என்று புருடா அடித்தாரே தினபதியார்—அது நடந்ததா?

(2) அண்ணாவுக்குப் பின்னர் நெடுஞ்செழியன்தான் தமிழக முதல்வராகவும், கழகத் தலைவராகவும் வருவாரென்று நம்பி நெடுஞ்செழியனது புளக்கும் கையுமாக காத்திருந்தாரே—அது நடந்ததா?

(3) வடபகுதிக்கு குமாரசூரியர் தமிழ் பல்கலைக் கழகம் தரப் போகிறார் என்று தினபதியார் கூறினாரே அது நடந்ததா?

(4) அண்மையில் நடந்த பாகிஸ்தான்—பாரதப் போரில் பாகிஸ்தானுக்கு சீனபடை உதவி கொடுக்கப் போகிறது என்றாரே—அது நடந்ததா?

தான் சொன்னால்தான் நடக்கும்—என்று கொக்கரிக்கும் தினபதியாருக்கு கண்ணதாசன் கூறிய பின் வரும் கதையைத்தான் கூறவிரும்புகிறோம்;

அத்திமரத்தில் ஒரு கிளி உட்கார்ந்திருந்தது. எதிர்த்தாற் போலிருந்த ஆலமரத்தில் ஒரு குயில் உட்கார்ந்திருந்தது.

அத்திமரத்துக் கிளி இடைவிடாமல் 'இன்றைக்கு மழைவரும்! மழைவரும்" என்று சொல்லிக் கொண்டிருந்தது.

பல நாட்கள் அதையே திருப்பித்திருப்பிச் சொன்னது.

ஒரு நாளும் மழை வரவில்லை;

ஒரு நாள் குயில் கேட்டது — 'நீ தினமும் மழை வரும் என்கிறாய்! ஒரு நாளும் மழை வரவில்லை— அதையே ஏன் திருப்பித் திருப்பிச் சொல்கிறாய்?

கிளி சொன்னது:— 'என்றைக்காவது மழை வராதா? அப்போது நான் சொன்னதால் தான் மழை வந்தது என்று சொல்லிக்கொள்ள முடியாதா?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மேடை

அன்பு நண்பா,

"தமிழரசுக்கட்சி பிளவுபடப்போகிறது"

"வடக்கு, கிழக்கு என்று கட்சி சிதறப் போகிறது"

'கிழக்கும், மேற்குமாக பாகிஸ்தான் பிரிந்தது போல் தமிழரசுக் கட்சியும் வடக்கு, கிழக்கு என்று பிரிந்துபோகப் போகிறது'

"கட்சிக்குள் பெரும் பிரளயம் ஏற்படப் போகிறது"

'கிழக்கு மாகாண பா. உ: க்கள் கட்சி செயற்குழு கூட்டத்தை பகிஷ்கரித்தனர்'

—இப்படியெல்லாம் நாளேடுகள் சில நமது இயக்கத்தைப்பற்றி அண்மைக்காலமாக நடத்திவரும் நச்சுப் பிரச்சாரத்தினைக் கண்டு உன் உள்ளம் எத்துணை கொதிப்படைந்திருக்கும்; எத்துணை புண்பட்டிருக்கும் என்பதனை நான் அறிவேன். இயக்கத்தை முறியடித்திட மாற்றார் திட்டமிட்டு சதிகள் பல புரிந்திடும் இவ்வேளையில், ஆத்திரப்படுவதை விட உன் போன்ற நம் இயக்கத் தோழர்கள் அறிவுக்கு சற்றுவேலை கொடுத்திடுவதே பொருத்தமானதும், அவசியமானதுமாகும்.

நம்மை அழித்திட—நமது இயக்கத்தை முறியடித்திட—நமது இயக்கத்தை அழித்திடுவதன் மூலம் தமிழினத்தின் எழுச்சியையும் விடுதலைக் குரலையும் கிள்ளியெறிந்திட—இந்நாட்டு நாளேடுகள் சில முயல்கின்றன என்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை. ஏனெனில் நமது தமிழரசு இயக்கத்தையும், தமிழ் விடுதலை உணர்வையும் அழித்தொழித்து விடுவதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டு இந்த ஏடுகள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதை நாம் அறிவோம்!

நம்முடைய இயக்கம் துவங்கிய நாள் தொட்டு நாம் எதிர் நீச்சலடித்தே வளர்ந்திருக்கிறோம். நமது இயக்கத்தை கருவிலேயே கிள்ளியெறிந்து விட மாற்றாரும் மாற்றார் ஏடுகளும் திட்டியதிட்டங்கள் கொஞ்ச நஞ்சமா? ஒவ்வொரு பொதுத்தேர்தல் சமயத்திலும் நமக்கு எதிராக இந்த ஏடுகள் கக்கும் விஷமும், செய்யும் கபடத்தனமான பொய்ப்பிரசாரமும் கொஞ்ச நஞ்சமா? நாம் நடாத்திய உரிமைப் போராட்டங்களை முறியடித்திட, இந்த ஏடுகள் நம்மீது பாடிய வசைமாரிகளைத்தான் நாம் மறந்திடுவோமா? சத்தியாக்கிரகப் பணத்தை சுருட்டிக் கொண்டவர்கள்; அடியும் உதையும் வாங்கித் தந்தவர்கள்; இனவெறியர்கள்; மொழி வெறியர்கள்; என்று எல்லாம் எத்துணை இழிவாக நாக்கில் நரம்பில்லாதவர்களால் நாம் இகழப்பட்டோம்!

இந்நாட்டு ஏடுகள் நம்மை அழித்திடுவதிலும் நம் இயக்கத்துக்குள் சிண்டு முடிந்திடுவதிலும்—நம்மைத் திட்டுவதிலும் ஈடுபட்டிருக்கின்றன என்றால் அது அவற்றின் பிறவிக் குணம்! அந்த ஏடுகளின் முதலும் முடிவுமான இலட்சியமே தமிழரசு இயக்கத்தை வெட்டி வீழ்த்திடுவதுதான்! தமிழினத்தை அடிமைப்படு குழியில் தள்ளி வீழ்த்துவதுதான்!

சென்ற தேர்தல் முடிவடைந்தவுடன்—1970 மார்ச் 27ன் பின்—நம்மை பற்றி இந்த ஏடுகள் எழுதியதென்ன? முடிந்தார்கள்; தொலைந்தார்கள்; செல்வாக்கு இழந்தார்கள்; தமிழரசாரின் சரித்திரமே இத்துடன் முடிந்தது என்றன்றோ எழுதி புளகாங்கிதமடைந்தன இந்த ஏடுகள்! நாம் அழிந்து விட்டதாக அன்று இப்படி மகிழ்ச்சி கொண்டாடிய இந்த ஏடுகள்—ஒன்றரையாண்டுக் கிடையில் தமிழினத்தின் எழுச்சிகண்டு குலைநடுங்கி நமது இயக்கத்தை முறித்துவிடும் நோக்குடன் குளறுபடிச் செய்திகள் வெளியிட்டு தமிழினத்தின் ஒற்றுமையைக் குலைத்து விட முயலுகின்றன!

நம்மை அழித்துவிட்டால் — நமது இயக்கத்தை சின்னாபின்னப்படுத்திவிட்டால் — இந்நாட்டுத் தமிழினத்தின் விடுதலைக்குரலை சுலபமாக நசித்துவிடலாம்; தமிழினத்தின் கட்டுக்கோப்பையும், ஒற்றுமையையும் சிதறடித்துவிடலாம்; என்பது சிங்கள ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளான இந்நாட்டு ஏடுகளுக்குத் தெரியும். அதனால்தான் நமக்குள் குரோதம் மூட்டி இயக்கத்தை அழித்துவிட அவை முயற்சிக்கின்றன.

தமிழரசுக்கட்சிக்குள் பிளவு; கட்சி வடக்கு, கிழக்கு என்று உடையப் போகிறது; 'பிரளயம்' ஏற்படப் போகிறது; என்றெல்லாம் சில ஏடுகள் எழுதுகின்றன என்றால், கட்சிக்குள் பிளவு ஏற்படாதா, வடக்கு கிழக்கு என்ற பிரதேசப்பிரிவினை நமக்குள் தோன்றாதா? மூட்டி மோதி நமக்குள் நாமே அழிந்து விடமாட்டோமா, என்கிற தமது நப்பாசையைத்தான் அந்த ஏடுகள் அப்படி எழுதுவதன் மூலம் பிரதிபலித்திடுகின்றன. ஆமாம் நண்பா, நமது இயக்கம் சிதறினால், விழாக்கொண்டாடி சிறப்புமலர் போடவும் இந்த ஏடுகள் தயங்காது; நம்மை அழிப்பதிலே அத்துணை ஆனந்தம் அவர்களுக்கு!!

இந்நாட்டில் தமிழ் காங்கிரசு, என்றொரு கட்சியிருந்தது; அந்தக் கட்சியை விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டது சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம்; தமிழ் இனத்தின் மத்தியில் உள்ள உதிரிகளையும் சுயேச்சைகளையும் அற்ப சலுகைகளை காட்டி விலைக்குவாங்கி தமிழ் மக்களின் விடுதலை எழுச்சியை மட்டம்தட்டும் முயற்சியில் அவர்களை ஈடுபடுத்தியிருக்கிறது. கூட்டணியின் ஒரு கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியோ தமிழினத்தின் விடுதலை உணர்வுகளுக்கு எதிராகவும், சிங்கள திணிப்புக்கு சாதகமாகவும் தமிழர் மத்தியில் பிரசாரம் செய்யும்பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருக்கிறது! சிங்கள மக்களின் மற்றோர் பெரிய கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியோ இரண்டாக பிளவுபட்டு ஆளுங்கட்சிக்கு மண்டியிட தயாராக இருக்கிறது—

இந்நிலையிலும், தமிழரசுக் கட்சி ஒன்றுதான் வளையாமல் நெளியாமல்—சிங்கள ஏகாதிபத்தியத்தை வலிவுடன் எதிர்த்துப் போராடி வருகிறது: தமிழினத்தின் அடிப்படை உரிமைகளை அங்கீகரிக்காத புதிய அரசியலமைப்பு சட்டத்தையும் தமிழரசுக்கட்சியொன்றே துணிந்து எதிர்த்து வருகிறது. ஈழத்தமிழினத்தின் விடுதலைக்குரலை—விரசுதந்திர வேட்கையைவிடாப்பிடியாக எதிரொலித்து வருகிறது. மயங்காமல் தயங்காமல்—பதவிகளையும் அற்ப சலுகைகளையும் துச்சமென மதித்து—இனத்தின்உரிமைகளுக்காக விடாப்பிடியாக போராடி வருபவர்கள் நாமே!

எனவேதான் நண்பா, அடக்கு முறைகளால் நம்மை அழித்துவிட முயன்று தோற்றவர்கள்—பொய்ப்பிரசாரங்களால்நம்மைஒழித்திடலாமென்று மனப்பால் குடித்து ஏமாந்தவர்கள்—இன்று பிரதேசப் பிரிவினை பேசி, நமக்குள் சிண்டு முடிந்து — நம்மை அழித்திடலாமென்று கனவு காண்கிறார்கள்!

## 'நான்' அல்ல 'நாம்'

அவர்களுக்கு நாம் பணிவுடன் கூறிக்கொள்வோம் — நாம் கொள்கையுறுதியில் நெருப்பு போன்றவர்கள். எங்களுடன் மோதினால் சுடுபட்டுக்கொள்ளப் போகிறவர்கள் எம்முடன் மோதுகிறவர்களே தவிர நாமல்ல—கிழக்கு, வடக்கு, மலையகம் என்ற பிரதேசப் பிரிவினைகளையே கிள்ளியெறிந்தவர்கள் நாம். நம்மால் ஒழித்துக்கட்டப்பட்ட அதே பிற்போக்குக் கூச்சலை எழுப்புவதால் நம்மை அசைத்துவிட முடியாது. இத்தகைய கூச்சலுக்கு செவிமடுப்பவன் நமது இயக்கத்தில் யாருமில்லை—அப்படி தப்பித்தவறி இங்கு யாராவது இருந்தால்—அவன் தவறுதலாக இங்கே வந்து விட்டவனே தவிர நம்முடைய உணர்ச்சியிலும் இலட்சியத்திலும் ஒன்றுபட்டவனாக இருக்கமுடியாது!

"நான் அல்ல — நாம்" என்கின்ற கூட்டு மனப்பான்மை — நமக்குள் இருக்கும்வரை நம்மை யாரும் அசைத்துவிட முடியாது!

என்வே நண்பா, மாற்றாரின் பொய்ப் பிரசாரங்களையும், நாள் ஏடுகளின் சின்னத்தனங்களையும் கண்டு சஞ்சலப்படுவதை விடுத்து—ஆக்கபூர்வமாக இனத்தின் விடுதலைக்கு நாம் ஆற்றவேண்டிய பணிகளில் தீவிர கவனம் செலுத்துவதே உனது கடமையாக இருந்திட வேண்டும்! நம்முடைய இடைவிடாத உழைப்பினால்—தீவிர பிரசாரத்தினால் விடுதலை உணர்வும், தமிழ் உணர்வும் இன்று தமிழ் இளைஞரிடையே பொங்கிடுவது கண்டு பூரித்துக் கிடக்கிறேன் நான்!

தமிழைப் பற்றி — தமிழின் கீர்த்தியைப் பற்றி—பேசினால்தான் தமிழ் மக்களின் மத்தியில் தலைகாட்டலாம் என்கின்ற மகிழ்ச்சியான நிலை தோன்றியிருக்கிறது இன்று!

தமிழுக்கு புதிய அரசியல் சட்டத்தில் [illegible] நீதி [illegible] மொழி உரிமை மறுக்கின்ற — தமிழையும் தமிழினத்தையும் புறக்கணித்து அழித்தொழித்துவிட கங்கணம் கட்டி செயற்பட்டு வருகின்ற— சிங்கள அரசுமல்லவா தமிழுக்கு விழா எடுத்திருக்கிறது சென்ற கிழமை யாழ் நகரில்! ஆமாம் நண்பா, கலாசாரப் பேரவை யாழ் மாநகரசபை மண்டபத்தில் நடத்திய கன்துடைப்பு தமிழ் இலக்கிய விழாவையே இங்கு குறிப்பிடுகிறேன்!

தமிழுக்கு இந்நாட்டில் அற்ப உரிமையும் தரக்கூடாதென்று வெறிகொண்டு ஆர்ப்பரித்தெழுந்து போராடி சுண்டுபட்டிறந்த சிங்கள வெறியன் இரத்தினசாராவுக்கு ஆயிரக்கணக்கான ரூபா செலவில் நினைவுச் சின்னம் எழுப்பி மலர் வெளியிட்டு மகிழ்ந்த கலாசார அமைச்சுக்கு தமிழின்மேல் இப்போது திடீர் காதல் பிறந்துவிட்டதாம் —அதனால் விழா எடுத்தார்களாம்—அதை நாம் நம்பவும் வேண்டுமாம்!

இந்த விழாவிலே 'தேசிய ஒருமைப்பாடு' பற்றியே அதிகம் பேசப்பட்டிருக்கிறது — இவர்கள் கூறும் தேசிய ஒருமைப்பாடு எப்படி இருக்கும் என்பதை இலக்கியவிழாவின் அழைப்பிதழே எடுத்துக்காட்டிவிட்டது! ஆம் நண்பா, தமிழர் தலைநகரில் — அதுவும் நூற்றுக்கு நூறு வீதம் தமிழர் வாழும் யாழ்நகரில் — தமிழ் இலக்கிய விழா — அதற்கான அழைப்பிதழில் முதல் இடம் எதற்குத் தெரியுமா? சிங்களத்துக்கு! ஆமாம் நண்பா, தமிழ் விழாவுக்கு சிங்களத்தில் அழைப்பு! இதுதானும் தேசிய ஒருமைப்பாடு! சிங்களத்துக்குமுதலிடம் தந்து செந்தமிழை பின்னுக்குத் தள்ளிவிட்டுத் தான் 'தேசிய ஒருமைப்பாடு' ஏற்படுத்தப் போகிறார்களாம்!!

தென்னகத்துடனான நமது மொழி இலக்கிய கலாசார தொடர்புகளை துண்டித்து—சிங்கள இலக்கியங்களையும் கலாசாரங்களையும் தமிழ் மக்களிடையே புகுத்தி—தமிழின் தனித்துவத்தை கெடுத்து மொழியை அழிப்பதே சிங்கள ஏகாதிபத்தியத்தின் நோக்கம். அந்த நோக்கத்தையே கலாசார அமைச்சு யாழ் நகரில் நடத்திய விழா பிரதிபலித்திருக்கிறது!

தமிழனுக்கு உணர்ச்சிகூடாதென்றும் கவிதை பிறப்பது உணர்ச்சியிலல்ல என்றும் தமிழ்மொழியை ஆராய்வது பிரேத பரிசோதனை செய்வது போன்றதேயென்றும் கூறிய கலாநிதிகளும், தமிழின் பகைவர்களும், தமிழினத்தை கலப்பு சாதியென்று கூறியவர்களும், தமிழ்த் துரோகிகளும் ஒன்றுகூடி விழா எடுப்பதால், தமிழ் மக்களின் மொழி, இன விடுதலை உணர்வுகளை மங்கச் செய்துவிடமுடியாதென்பதை அரசும் அரசுக்கு ஆலவட்டம் வீசுவோரும் தெரிந்துகொண்டிடவேண்டும்!

இந்த விழாவில் பேசிய அமைச்சர் குமாரசூரியர் நல்லதோர் நகைச்சுவையை உதிர்த்திருந்ததை நீ கவனித்திருப்பாயோ என்னவோ நான் கவனித்தேன்!

"மூப்பெரும் வேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் கட்டிக்காத்த தமிழை இன்று இலங்கையில் மக்கள் அரசாங்கம் பேணிக்காக்க நடவடிக்கையெடுத்துவருகிறது."

என்று குமாரசூரியர் கூறியதில் "மக்கள் அரசு தமிழை காக்க நடவடிக்கை யெடுத்துவருகிறது" என்ற கூற்று நல்ல நகைச்சுவைக்குரியதொன்றானாலும் — தமிழ் நாட்டுக்கும் தமிழ் இலங்கைக்கும் இரும்புத்திரை போட்டுள்ள தமிழ் அமைச்சருக்குக்கூட தமிழ் வளர்த்த மன்னர்களைப் பற்றி நினைக்கும்போது தமிழ்நாட்டு சேர சோழ பாண்டிய மன்னர்களே நினைவுக்கு வந்திருக்கிறார்கள்!

"தமிழ்நாடு எங்கள் தாய் நாடு"

என்றும் அண்மையில் கொழும்பில் ஓர் கூட்டத்தில் குமாரசூரியர் கூறியிருந்ததை கவனித்திருப்பாய்! எனவே நண்பா, என்னதான் முயன்றாலும், தமிழ் நாட்டுக்கும் ஈழத்தமிழர்களுக்குமுள்ள உறவும் தொடர்பும் யாராலும் எக்காலத்திலும் அறுத்தெறிய முடியாதவை என்பதை குமாரசூரியரே தன்னையறியாமல் தனது வாய்மொழி மூலம் ஒப்புக்கொண்டு விட்டார்!

ஒரேமொழி, ஒரே கலாசாரம், ஒரே இலக்கியம் ஒரே மத உணர்வுகள்கொண்ட தமிழ்நாட்டுக்கும் ஈழத்தமிழர்களுக்குமிடையேயுள்ள இயற்கையான தொடர்புகளை அறுத்தெறிந்துவிட்டு— வேறுபட்ட மொழி, வேறுபட்ட கலாசாரம், வேறுபட்ட மத உணர்வுகள் கொண்ட சிங்கள மக்களுடன் தொடர்பை வளர்க்கப் போகிறார்களாம், அரசினரும் அரசின் தமிழ்க் கைக்கூலிகளும்! இது தமிழை அழிக்கும்—தமிழின் தனித்துவத்தை கெடுக்கும் நீண்டகால சூழ்ச்சித் திட்டம்!

சிங்கள மக்களுடன் சமத்துவ அடிப்படையில் இணைந்துவாழ நாமும் தயாராகத்தான் இருக்கிறோம். ஆனால் எமது மொழியை தாழ்த்தி எமது கலாசாரத்தையும் தனித்துவத்தை அழித்தொழித்து தமிழ்நாட்டுடனான உறவுகளை அறுத்தெறிந்துவிட்டு — நம்மை அழித்திடும் வகையில்— ஆளும் இனம், ஆளப்படும் இனம்— என்கின்ற நிலையில் சிங்கள மொழி, கலாசார ஆதிக்கம் தமிழினத்தின்மீது புகுத்தப்படுவதை — திணிக்கப்படுவதை இறுதிவரை எதிர்த்து முறியடித்தே தீருவோம்!

உன் அன்புத் தோழன்

**கோவை மகேசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## கலாசார விழாவா? கழுத்தறுப்பு விழாவா?

தமிழ்மொழிக்கு இந்நாட்டில் கொள்ளிக்குடம் உடைக்கும் விழா ஒன்று சென்றவாரம் யாழ்நகரில் நடைபெற்று முடிந்திருக்கிறது—

தமிழை ஒழித்துக்கட்டுவதில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருப்பவர்கள் — வரவிருக்கும் புதிய அரசியலமைப்பில் தமிழின் உரிமைகளை அங்கீகரிக்க மறுத்தவர்கள் — தமிழ் நாட்டுக்கும் ஈழத்தமிழினத்துக்குமிடையே இருந்து வரும் மொழி, கலாசார தொடர்புகளை துண்டிக்க முனைந்துள்ளவர்கள் — தமிழ் விழா என்ற பெயரில் தமிழுக்கு இழிவு தரும் விழாவொன்றை யாழ்நகரில் நடத்தி முடித்துள்ளனர்.

கலாசார அமைச்சின் ஆதரவுடன், கலாசாரப் பேரவை நடத்திய தமிழ் இலக்கிய விழாவினையே இப்படிக் குறிப்பிடுகிறோம்—

தமிழுக்கு அவமானத்தையும், அவமதிப்பையும், இழிவையும் தரும் விழாவாக இது நடைபெற்று முடிந்திருக்கிறது—

இந்த தமிழ் விழாவின் அமைப்பிதழ்கூட முதலிடம் சிங்களத்துக்கு தரப்பட்டு தமிழ் தாழ்த்தப்பட்டிருக்கிறது.

இந்த விழாவில் பேசப்பட்ட பேச்சுக்கள் — தமிழின் தனித்துவத்துக்கும், ஆற்றலுக்கும் சவால்விடுவதாகவும், சிங்கள கலாசாரத்தை தமிழில் புகுத்தி நமது தூய தமிழ் கலாசாரத்தை சிதைப்பதற்கு கால் கோளிடுவதாகவுமே அமைந்திருக்கின்றன.

தமிழ் மக்களிடையே கொந்தளிக்கும் தமிழுணர்வையும் இன விடுதலை வேட்கையையும், மட்டந்தட்டவும் தமிழ் மொழியின் தூய்மையை—தனித்தியங்கும் அதன் பாரம்பரிய மரபை—சிதைக்கவுமே தமிழ் இலக்கிய விழா என்ற போர்வையில் இந்த கண் துடைப்பு நாடகம் நடத்தப்பட்டிருக்கிறது.

இத்தகைய விழாக்களால் தமிழன் ஒருபோதுமே ஏமாறமாட்டான் என்பதையும், தமிழினத்தின் விடுதலை உணர்வையும், எழுச்சியையும் திசைதிருப்பிவிட முடியாதென்பதையும் கலாசார அமைச்சும், கலாசாரப் பேரவையும் உணர்ந்து கொள்ளட்டும்!

இந்த விழாவில் 'தேசிய ஒருமைப்பாடு' பற்றியும் அதிகமாகப் பேசப்பட்டிருக்கிறது.

தேசிய ஒருமைப்பாடு பற்றியே அதிகம் அலட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு கூறிக் கொள்வோம் — இப்படி விழாக்களில் நின்று மாரித் தவளைகள்போலக் கத்துவதால் தேசிய ஒருமைப்பாடு ஒருபோதுமே ஏற்பட்டுவிடாது—

இந்நாட்டில் சிங்களத்துடன் தமிழும் சம அந்தஸ்துள்ள ஆட்சிமொழியாக்கப்படாவிட்டால்—

தமிழும் நீதிமன்ற மொழியாக்கப்படாவிட்டால்—

இந்நாட்டையே தாயகமாகக்கொண்டு வாழும் மலையகத் தமிழனுக்கு குடியுரிமை வழங்கப்படாவிட்டால்—

ஈழத்தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காவிட்டால்—

இந்நாட்டில் தேசிய ஒருமைப்பாடு என்பது ஒருபோதுமே ஏற்படமுடியாதென்பதை தமிழ் இனத்தின் சார்பில் அழுத்தமாகக் கூறிவைக்க விரும்புகிறோம்.

---

## யாயாகானும் பீலிக்ஸ் டயசும்!

"இலங்கை ஒரே நாடு — இங்கு தனித்தமிழ் நாடு என்ற கோஷத்துக்கு இடமேயில்லை. அத்தகைய பிரிவினைக் கோஷங்களை அரசு அனுமதிக்காது — தனிநாடு கோருவது பைத்தியக்காரத்தனமானது"

— மேற்கண்டவாறாக யாழ்நகர் சென்றிருந்த பொது நிர்வாக, உள்நாட்டு உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா மிடுக்காகப் பேசியிருக்கிறார்.

பீலிக்ஸ் டயசின் மேற்படி பேச்சைப் படிக்கும்போது நமக்கு யாயாகானின் நினைவே ஏற்படுகிறது —

வங்க மக்கள், ஷேக் முஜிபுர் ரகுமானின் தலைமையில் ஆறு அம்சத் திட்டத்தின் கீழ் வங்கத்துக்கு மாநில சுயாட்சி கோரினார்களே தவிர "பங்களாதேஷ்" என்ற தனிநாடு கோரிக்கையை அவர்கள் முன்வைக்கவில்லை. பொதுத் தேர்தலிலும் வங்கத்துக்கு மாநில சுயாட்சி கோரிய அவாமி லீக் கட்சியையே வங்க மக்கள் பெரும்பான்மையாக ஆதரித்து — சனநாயக ரீதியில் தங்கள் விருப்பத்தையும் தெரிவித்தார்கள்.

ஆனால் வங்க மக்களின் சனநாயக பூர்வமான 'மாநில சுயாட்சி' என்னும் அபிலாசையை சர்வாதிகாரி யாயாகான் காலில் போட்டு மிதித்துவிட்டு வங்க இனத்தையே அழித்தொழிக்க முற்பட்ட காரணத்தால்தான், வேறுவழியின்றி "பங்களாதேஷ்" உருவாக வேண்டியும், பாகிஸ்தான் பிளவுபடவும் நேரிட்டது. வேறுவார்த்தைகளில் கூறினால் சுதந்திர வங்கத்துக்கு வித்திட்டது யாயாகானின் எதேச்சாதிகார நடவடிக்கைகளே.



# "மூவர்" திட்டம்

# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

தன்னம்பிக்கை, சுறுசுறுப்பான சுபாவம், தமிழ் இனத்தின் விடுதலை பற்றியே எந்நேரமும் சிந்தனை, பொதுத்தொண்டு புரிவதில் தணியாத ஆர்வம்—இவற்றின் மொத்த உருவமே அந்த 'நியூமாரலாஜி' நண்பர். பொதுத்தொண்டில் ஈடுபட்டு அதனால் கடனாளியாகியும் இருப்பவர் அவர்.

அந்த நண்பர் சென்ற பெப்ரவரியில் ஒருநாள் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். பல விஷயங்களையிட்டு உரையாடிக்கொண்டிருந்தோம். தமிழ்நாட்டுத் தேர்தல் நிலை பற்றியும், அங்குள்ள அரசியல் மாற்றங்களைப் பற்றியும் பேச்சு எழுந்தது—

திடீரென்று அந்த நண்பர் கேட்டார்— 'நாம் தமிழ் நாட்டுக்கு ஒரு தடவை சென்று திரும்புவோமா?'

நான் எதை நினைத்துக் கொண்டிருந்தேனோ அதையே அந்தநண்பரும் சொன்னபோது மெத்த ஆச்சரியப்பட்டேன். 'நட்பு' என்பது இப்படிப்பட்டதாகவல்லவா இருக்கவேண்டும்? ஒருவேளை 'நியூமாரலஜி' பார்த்து நல்ல நாள் என்பதறிந்துகொண்டுதான் அந்த நண்பர் வந்து இந்தப் பயணப் பேச்சைத் தொடங்கினாரோ என்று பின்னால் நமது பயணம் வெற்றிகரமாக முடிவடைந்தபோது நான் எண்ணியதுண்டு.

"நானும் அதையேதான் எண்ணிக்கொண்டிருந்தேன் — ஆனால் இந்தியத் தேர்தல் தொடங்குவதற்கு இன்னும் சில நாட்களேயுள்ளன. அதற்குமுன், பாஸ்போர்ட், விஸா, பால்குத்தல் போன்ற மாமூல் வேலைகள் முடிக்கவேண்டுமே' என்றேன்—

'முயன்றால் முடியாததென்ன?' என்றார் அந்த நண்பர்;

ஆக, நமது தமிழகப் பயணத்திட்டம் உருவாகிவிட்டது.

இது நடந்த இரண்டொரு நாட்களின் பின்னர், தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், ஈழத்தமிழ் இனத்தின் எழுச்சித் தலைவரும் என் உடன் பிறவா அண்ணனுமாகிய அமிர்தலிங்கம் அவர்களை அவரது இல்லத்தில் வைத்துச் சந்தித்தேன். தமிழகப் பயணத்துக்கு நாம் திட்டமிட்டுள்ளதை அவரிடம் எடுத்தவுடனேயே கூறிவிடாமல் பொதுவாக தமிழக அரசியலையிட்டு அவருடன் கலந்து பேசிக்கொண்டிருந்தேன்.

என்ன ஆச்சரியம்?

நான் என்ன எண்ணினேனோ—எனது 'நியூமாலராஜி' நண்பர் என்ன சொன்னாரோ— அதையேதான் சொன்னார் அண்ணன் அமிர்தலிங்கம்.

"தமிழ் நாட்டுக்கு ஒரு தடவை சென்று வரலாமென்று நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். தமிழ் நாட்டு தேர்தல் நிலைவரங்களையும், அரசியல் நிலையினையும் அறிவது மட்டுமல்ல— அங்கு நடைபெறும் தேர்தல் பிரசார முறைகள்—பிரசார நுட்பங்கள் — தி. மு. கழகத்தின் பிரச்சார யந்திரம் இயங்கும் முறை— இவற்றையும் கவனித்தவர இது ஒரு நல்ல சந்தர்ப்பம். அந்த முறைகளையும் பாணிகளையும் கவனித்து, அவற்றில் நல்ல முறைகளிருப்பின் அவற்றை இங்கு நமது கட்சியும் பின்பற்றலாமல்லவா? அத்துடன் தமிழ்நாட்டுக்கு சென்று தமிழுக்காக உழைக்கின்ற— போராடுகின்ற — தலைவர்களைச் சந்தித்து, அவர்களுக்கு ஈழத்தமிழர்களின் நல்லாதரவைத் தெரிவிப்பது அவர்களுக்கு உற்சாகத்தை தரும் என்பதுடன், ஈழத்துக்கும், தமிழ்நாட்டுக்குமிடையேயுள்ள கலாசார, மொழி உறவுகள் பலப்படவும் இது உதவுமல்லவா? எனவேதான் தமிழகத்துக்கு சென்றுவர திட்டமிட்டுக்கொண்டிருக்கிறேன். ஆனால்..." என்று சற்று இழுத்தார் 'அமிர்தலிங்கம்.

## கோவை-மகேசன்

தமிழ்நாட்டுக்கு அடிக்கடி பலர் சென்று திரும்புகிறார்கள்; ஒவ்வொருவரும் தத்தம் சுயநல நோக்கத்துடன் சென்று வருகிறார்கள். ஆனால் இயக்கத்தின் நலனை கருதியும் ஈழ-தமிழக உறவைப் பலப்படுத்தவுமே தாம் தமிழ் நாட்டுக்கு செல்லவிருப்பதாக நமது பொதுச்செயலாளர் தெரிவித்தபோது —அவரது ஆழமான இயக்கப்பற்றையும் இனப்பற்றையும், கண்டு உள்ளம்பூரித்த நான், "என்ன அண்ணன், ஆனால்...?" என்றேன்.

"இல்லைத் தம்பி, இங்கே கட்சி வேலைகள் பல மலைபோலக் கிடக்கின்றன. இதையெல்லாம் விட்டு விட்டு எப்படிப் போவதென்றுதான் யோசிக்கிறேன்," என்றார் அமிர்.

இச்சமயத்தில் குறுக்கிட்ட திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், "இல்லை, நீங்கள் போய்வரத்தான் வேண்டும்; நீங்கள் அங்கு போய்ச் செய்யப்போவதும் இயக்கத் தொண்டுதான்; இலட்சியப் பணிதான். எனவே பயணத்தை மேற்கொள்ளத்தான் வேண்டும்..." என்று உறுதியாக மொழிந்தார்.

இதுதான் சந்தர்ப்பம் என்று தமிழகத்துக்கு செல்ல நானும் எனது 'நியூமாரலாஜி' நண்பரும் திட்டமிட்டுள்ளதைக் கூறி நீங்களும் கண்டிப்பாக வரவேண்டுமென்றும் அப்படி வந்தால் நமது பயணம் மேலும் கலையும் பயனுமுள்ளதாக அமையுமென்றும் எடுத்துரைத்தபோது, மகிழ்ச்சியுடன் அதை ஒப்புக்கொண்டார் அண்ணன் அமிர்தலிங்கம்.

எமது பிரயாணத் திட்டத்தின்படி நானும் எனது நண்பரும் முதலில் தமிழ்

(11ம் பக்கம் பார்க்க)

---

இலங்கையில் நடப்பது என்ன? இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் தனித் தமிழ்நாடு கோரவில்லை; இலங்கையை பிரிக்கும்படி கேட்கவில்லை. 1949ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக தமிழ் பகுதிகளுக்கு ஒரு சமஷ்டி அரசியலமைப்புக்குட்பட்ட மாநில சுயாட்சியையே கோரி வந்திருக்கிறார்கள். 1956ம் ஆண்டிலிருந்து சமஷ்டி அரசியலமைப்புக்கோரும் தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகளை அடுத்தடுத்து வந்த ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும், தமிழ்ப்பிரதேசங்களிலிருந்து தொடர்ச்சியாக பெரும்பான்மையாக அனுப்பி வருவதன் மூலம் சனநாயக ரீதியில் தங்கள் அபிலாசைகளை வெளியிட்டு வருகிறார்கள் —

ஆனால் சிங்கள அரசோ, தமிழ்பேசும் மக்களின் நியாயமான—சனநாயகபூர்வமான இந்த அபிலாஷைகளை அங்கீகரிக்க மறுத்து —அவர்களது உரிமைகள் அனைத்தையும் உதாசீனம் செய்து வருகிறது.

புதிய அரசியலமைப்பை வகுக்க கூடிய அரசியல் நிர்ணயசபையும், தமிழ் மக்களின் அபிலாஷைகளை அங்கீகரிக்க மறுத்தது மட்டுமன்றி, அவர்களது அடிப்படை மொழியுரிமைக் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளமறுத்து விட்டது!

இந்நிலையிலும்-தமிழ் மக்கள் இதுவரை பிரிவினைக்கொள்கையை நிலைநாட்டவில்லை. இலங்கையின் ஒருமைப்பாடு கருதி சமஷ்டிக்குட்பட்ட மாநிலசுயாட்சியையே தொடர்ந்தும் கோரிவருகிறார்கள்.

யாயாகான் தனது ஆணவத்திமிரால் கொடுங்கோல் ஆட்சியால் — வங்கமக்களை நாட்டுப் பிரிவினைக்கு தள்ளிவிட்டது போல பீலிக்ஸ் டயசும், அவரது அரசும், தொடர்ந்து தமிழ் மக்களின் சனநாயக பூர்வமான அபிலாஷைகளைப் புறக்கணிப்பதன் மூலம், தமிழ மக்களையும் பிரிவினை [illegible] நமது பிரார்த்தனையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாஷ் தங்கத்துரை!



## வேஷதாரிகளின் முகமூடிகளை

### மலையகத்தில் கிழித்தெறியுங்கள்!!

'தோட்டத் தொழிலாளரின் உழைப்பை நாம் ஏற்றுக் கொள்கின்றோம் ஆனால் அவர்களுக்கு சாதாரண உரிமைகளைக் கூட வழங்க மறுக்கின்றோம். அரசியல் நிர்ணய சபையில் இந்தப் பிரச்சினை எழுந்தபோது நாம் எத்தனையோ முறை எமது கட்சியின் சார்பில் தோட்டத் தொழிலாளர்களினது உரிமைகளை வழங்கும்படி வேண்டினோம். ஆனால், தொழிலாளர்களின் தோழர்கள் என்று கூறுபவர்கள் இந்தத் தொழிலாளர்களைப் பற்றிச் சிந்திக்கவில்லையே'

இவ்வாறு ஆட்சியாளரை இ. தொ. கழகத் தலைவர் திரு. தங்கத்துரை நாடாளுமன்றத்தில் கேட்ட கேள்வி மலையகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. வடக்கிலும், கிழக்கிலும் உள்ளவர்கள் மலையக மக்களுக்கு சேவை செய்ய முடியுமா? என்று கேட்டவர்கள் கூட இன்று நமது முகமூடி அவர்களால் கிழிந்து விடுமோ என்று அஞ்சுகின்றார்கள். இன்று அரசாங்கத்தின் மீது பொது மக்கள் நம்பிக்கை உழக்கும் நிலையில் இருக்கின்றனர். இடதுசாரித் தொழிற்சங்கங்கள் சில உண்மைகளை மறந்து செயல்படுகின்றன, என்பதனை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இடது சாரிகள் ஆட்சியிலிருக்கும் போதுதான் தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் காற்றில் பறந்தன. இன்று சம்பள உயர்வு உட்பட இதரகோரிக்கைகளைப் பெற போராடுமாறு தூண்டுகிறார்கள். அடுத்து இவர்கள் ஆட்சியாளர்களானால் இந்தக் கோரிக்கைகளைக் கேட்காமலே வழங்குவார்களா? என்பது இன்றையதினம் மக்களிடையே எழவேண்டிய கேள்வியாகும். அன்றுடம் காய்ச்சிகளான ஏழைத் தொழிலாளர்களுக்கு தலைவர்களாக இருக்கும் தொழிற்சங்கவாதிகள் பலரிடம் நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு கடுகளவும் இல்லை என்பதைப் பொதுமக்கள் உணர்ந்து கொண்டார்கள்.

ஒரு காலத்தில் ஆண்டியாய் இருந்தவர்கள் அடுப்பங்களரயில் வேலைசெய்தவர்கள்

**வி. ஆறுமுகம்**

இன்று தோட்ட முதலாளிகளாகவும் கைத்தொழில் அதிபதிகளாகவும் ஏற்றுமதி இறக்குமதி செய்பவர்களாகவும் இருக்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் தொழிலாளர்களின் பணத்தைச் சுரண்டிவாழ்கின்றனர் என்றுதான் கூறலாம்.

இவ் வேளையில் நாம் சிலரை மறந்துவிடக்கூடாது இன்று பெரும் தலைவர்களாக இருப்பவர்கள்ஸ்தாபனத்தை வளர்ப்பதற்காக லட்சக் கணக்கில் செலவளித்துள்ளார்கள் இவர்களில் சிலர் தங்களின் புகழையும், பெயரையும் காப்பாற்றவும் பூமாலைகளுக்காகவும் பணத்தை அள்ளி இறைத்தவர்களே அன்றித் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தபோது பணவுதவி வழங்கியவர்கள் அல்லர்.

காலம் சென்ற திருவாளர்கள் நாயர், வெள்ளையன் போன்றவர்கள் தங்களின் உடமையெல்லாம் அடகு வைத்துத் தொழிலாளரின் நலனுக்காக உழைத்தவர்கள். தொழிற்சங்க வரலாற்றில் இனிமேல் திருவாளர்கள் குணசிங்க, கே. ஜி. எஸ். நாயர், கே. எஸ். இராஜலிங்கம், வி. கே. வெள்ளையன் போன்ற கண்ணியம் நேர்மைமிக்கவர்கள் கிடைப்பார்களா என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது. எனவே தொழிற்சங்க தலைவர்கள் தொழிற்சங்கவாதியாகும் முன்னர் எந்த நிலையிலிருந்தார்கள் என்பதைச் சற்று பொது மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் இவையெல்லாம் தொழிற் சங்கவாதிகள் வெளிப்படையாகக் கூறப்போவதில்லை.

தொழிற்சங்கத்தில் கௌரவ உத்தியோகத்தர்களாக இருப்பவர்கள் கூட ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்குபவர்களாக மாறியுள்ளார்கள். சிலதொழிற்சங்கங்களில் குடும்பமே உத்தியோகத்தர்களாக இருக்கின்றார்கள். இப்படி இருக்கும் பொழுது தொழிலாளர் நன்மை என்ற நிலை மறந்து சுயநலத்தின் சுயரூபம் வெளியாகிறது. இவ்வேளையில் தொழிலாளர்கள் அதைக் கவனமாக ஆராய்ந்தறிந்து அவர்களின் பகல் வேஷ பகிட்டுக்கு அடிபணியாமல் சேவை உள்ளம் கொண்ட உண்மையானஒரு தலைவனை நாடி வாழத் தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

---

இராகலை — சூரியகாந்தி குரூப்பைச் சேர்ந்த டியகில்ல டிவிசனில் வசிக்கும் இலங்கைத் தொழிலாளர் கழக உறுப்பினர் திரு. இராமலிங்கம் இந்த டிவிசனில் வேலைபார்க்கும் மேற்பார்வையாளர் திரு. பொன்னையா என்பவரை அடித்ததாகவும், இதுவிடயமாக தோட்ட நிர்வாகம் நடத்திய விசாரணையில் கலந்து கொள்ளாது, தோட்டத்தின ஒழுங்கு நடவடிக்கைகளை மீறிநடந்ததாகவும், குற்றஞ் சாட்டி மேற்படி தோட்ட நிர்வாகம் திரு. இராமலிங்கத்திற்கும் அவர் மனைவி கறுப்பாயிக்கும் 1970ம் ஆண்டு ஜூன், முதலாந் திகதி வேலைநிறுத்தியதை ஆட்சேபித்து திரு. இராமலிங்கம் இராகலை இலங்கைத் தொழிலாளர் கழக வாயிலாக நுவரெலியா தொழில் நீதிமன்றத்தில் ஒரு மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கு முதலில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கழகத்தின் துணைத்தலைவர் திரு. வி. என். நவரத்தினம் பா. உ. வழக்கறிஞர் ஆஜரானார். இதனை தொடர்ந்து விசாரணை நடத்திய திரு. வி. என். நவரத்தினம் பா. உ. வெளிநாடு சென்றிருந்தமையால், இறுதியில கடந்த 22-11-1971ல் நடைபெற்ற மேல் விசாரணையில் தமிழரசுக் கட்சித் தலைவர் தந்தை செல்வாவின் புதல்வரும் வழக்குரைஞருமானதிரு. சந்திரகாசன் அவர்களும், இராகலை மாவட்டப் பிரதிநிதி திரு. வி. ஆறுமுகநாதன், உடப்புசலாவபிரதிநிதி திரு. டி. வி. கருப்பையா ஆகியோரும் அனுசரணையாக ஆஜரானபோது தொழில் நீதிமன்றநீதவான் திரு. இராமலிங்கத்திற்கும், அவர் மனைவிக்கும் நஷ்ட ஈடாக ரூபா 1350/- வும் உடன் திரும்பவும் தோட்டத்தில் வேலை வழங்குமாறு கட்டளையிட்டார்.

இந்த வழக்கின் முடிவை ஆவலோடு எதிர்பார்த்திருந்த ஆயிரக்கணக்கான கழக அங்கத்தவர்கள், நாள்தோறும் இராகலை அலுவலகத்திற்கு விஜயம் செய்து, முடிவை அறிந்து அளவிலா ஆனந்தத்துடன செல்கின்றார்கள். இந்

## வேலை நீக்கம் செய்யப்பட்டவருக்கு மீண்டும் வேலையும் நட்ட ஈடும்!

## இ. தொ. கழகம் பெற்றுக் கொடுத்தது!

தொடர்பாக டியகில்ல டிவிசனைச் சேர்ந்த மாற்றுக் கட்சிக்காரர்கள் கழகத்தில் அங்கத்துவம் வகிக்க வேண்டிய ஏற்பாடுகளை இராகலை கழகப் பணிமனையுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள்.

இந்த வெற்றியின் காரணமாக, கந்தப்பளை, மத்துரட்ட குரூப்பைச் சேர்ந்த கிருக்காக்கந்தை டிவிசனில் இ. தொ. காவில் அங்கத்துவம் வகித்திருந்த சுமார் 150 அங்கத்தவர்கள் டிசம்பர் மாதத்திலிருந்து இலங்கைத் தொழிலாளர் கழக அங்கத்தவர்களாக மாறிக் கொண்டார்கள். இத் தோட்டத்தைச் சேர்ந்த தலைவர் கழகப்பிரமுகருக்கு அளித்தபேட்டியில் நான் 16வருடமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் அங்கத்துவம் வகித்து வருகின்றேன், ஆனால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் கழகம் மலையக மக்களுக்கு ஆற்றிவரும் சேவை மகத்தானது என்று குறிப்பிட்டார்.

### இராகலை மாவட்ட தேர்தல்

21. 11. 1971ல் இராகலை இ. தொ. கழக பணிமனையில் நடைபெற்ற மாவட்டக்குழு தேர்தலில் பின்வரும் உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார்கள்.

மாவட்டத்தலைவர்— திரு. ந. அ. சின்னத்தம்பி. துணை மாவட்டத்தலைவர்— திரு. கே. பழனியாண்டி. மாவட்டக்காரியதரிசி— திரு. எஸ். மாணிக்கம். துணை மாவட்டக் காரியதரிசி— திரு. எம். ஆர். கே. காளிமுத்து. மாவட்டப் பொருளாளர்— திரு. எம். அங்கமுத்து.

### கமிட்டி உறுப்பினர்கள்

மகா ஊவா — இராமலிங்கம். மார்காஸ்—எஸ். அம்மாசி. மகாகுடுகல—பி. சின்னையா. கொங்காகொடிய நடுப்பிரிவு—டி. பி. செல்லையா கொங்கோடியா கீழ்ப்பிரிவு —கே. வேலாயுதம். மத்துரட்ட—கிருக்காக்கந்தை— எஸ். சிதம்பரம் பாக்குத் தோட்டம்— சென்ஜோன்ஸ் ஆர். பி. வேலு டியநில்ல— அரஸ்பத்த டிவிசன் இராமலிங்கம், டெலிமார் —சின்ன உப்புராசி—அடைக்கன். கோணபிட்டு—சீனுபட்டி— கோணகல்ல—செண்பகராமன். ஒப்டன்—ஆர். தங்கவேல்.

---

## மலையகத் தொழிலாளர் முன்னர் அஸீஸ் நிகழ்த்திய ஆங்கில பேச்சு!

## இவரா மலையகத் தமிழரின் பிரதிநிதி?

மலையகத்தின் மத்தியஸ்தானமான விளங்கும் கினிகத்தேனை பிளக்வாட்டர் தோட்டத்தில் கடந்த 2-ம் திகதி நடந்த தொழிலாளர்களின் — பாட்டாளி வர்க்கத்தின்—படிப்பறிவற்ற பண்பாளர்களின் பொதுக் கூட்டத்தில்—ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் மலையக மக்களின் ஏகப் பிரதிநிதியும், மலையக பாட்டாளி மக்களின் உரிமைத்தலைவரென தம் பட்டமடிப்பவருமான ஜனாப் அப்துல் அஸீஸ் அவர்கள் மாற்று மொழியாம் ஆங்கிலத்தில்—கோர்ட்டும் சூட்டும் அணிந்த வண்ணம்—சொற்பொழிவாற்றினார்.

### மலையகத்திலே.........

பல பாட்டாளி மக்கள் தலைவர் என்ன உளறுகிறார் எனத்தெரியாமல் விழிபிதுங்கினர். இக் காட்சி மலையகத்திலேயே அதன் வரலாற்றிலே மறக்கமுடியாத ஒரு துர்ப்பாக்கிய காட்சியாகும்.

அன்னார் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்ற ஆரம்பித்ததுமே ஒரு தமிழன்பர், "ஐயா! ஆங்கிலத்தில் [illegible] உரைத்தால் எங்களுக்கு— எங்களில் பலருக்கு விளங்காது. ஆதலால் தயவுசெய்து தமிழில் உரையாற்றினால் மிகவும் நல்லது" என்று பணிவுடன் கூறியதும், முதலில், "ஆங்கிலத்தில் உரையாற்றுகிறேன்! பின் தமிழிலும் "சிறிது" பேசுகிறேன்" என்று அவ்வன்பரிடன் கூறிவிட்டு, தனது பக்கத்தில் வீற்றிருந்த (குளிர் பானத்துடன்) தனது நண்பரிடம் மொழிபெயர்க்குமாறு கூறிவிட்டு தமது ஆங்கிலத் திறமையை அம்பலப்படுத்தி— தமிழரை—தன்மானத் தமிழரை அவமதித்து விட்டார்.

முதலில் ஆங்கிலத்தில் [illegible] மக்கள் தலைவர் [illegible] வர்ணிக்கப்பட்டது) தொழிலாளர்கள் மனம் புண்பட்டு நகர ஆரம்பிப்பதை தன் கடைக்கண் பார்வையால் கண்டுணர்ந்ததும், மொழிபெயர்ப்பாளரை தன் கண்ணின் "ஜாடை"யால் அமர வைத்து விட்டு—கன்னித் தமிழில் (கண்ணியமற்ற—கருத்தற்ற—உண்மையற்ற) "தொழிலாள வர்க்கத்திற்கென்றே போராடப் பிறந்த நாம், உங்கள் அனைவரின் உரிமையையும் இவ்வாண்டில் நிச்சயம் பெற்றுத்தரவே போகிறோம்" என்று கங்கணங்கட்டிய விந்தையைக் கண்டோர் "குசுகுசு" என (மௌனமாக தமக்குள்ளேயே) பரிகசித்தனர்.

இந்த தமிழ்த்தலைவரின் பேச்சுக்கு வக்காலத்து வாங்கினார் ஒரு பிரபல தமிழ் ஆசிரியர். (இவர் அப்துல் அஸீஸின் அந்தரங்க பள்ளி வாழ்க்கை நண்பர்) இவரோ இ. தொ. காவின் 26 நாட்களுக்கு 90 ரூபா என்ற மாதச்சம்பளக் கோரிக்கையை 30 நாட்களுக்கு 90 ரூபா என்று மாற்றி தொழிலாளி வர்க்கத்தையே—உழைப்பாளரின் உண்மை மன நிலையையே தடுமாறச் செய்துவிட்டார்.

இந்த ஆங்கில "வாரிசு"கள்தான் மலையக மக்களின் "தமிழ்ப்பிரதிநிதி"யா? உழைப்பாளர்களின் உண்மைத் "தலைவர்"களா?— ஏமாற்றுப் பேர்வழிகள்! ஏய்த்துப் பிழைக்கும் பரம வைரிகள்!! இதற்கு என்ன விளக்கம் தருவார்களோ? பொறுத்திருந்து பார்ப்போம்!

---

### அடுத்த இதழில்...

பண்டாரவளை, பதுளை, கொட்டகலை ஆகிய இடங்களில் நடைபெற்ற பொங்கல் விழாக்களில் கவிஞர் காசி ஆனந்தன் ஆற்றிய உரைகளின் தொகுப்புரை இடம்பெறும்

—ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் முட்டி மோதுகின்றது இராணுவம்

## தாளம்போடும் குஞ்சுகளே தட்டிக்கேட்கத் துணிவுண்டா?

முல்லைத்தீவில் வைத்திய சாலைக்குச் செல்லும் சந்திக்கருகாமையில் ஓர் புறத்தில் இராணுவ முகாமும் மறு ஓரத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் புதிய டிப்போவும் அமைந்துள்ளது. இரண்டும் எதிருக்கெதிர் இருப்பதால் இ. போ. ச ஊழியர்களும்—இராணுவமும் இடைக்கிடை முட்டி மோதிக் கொள்கின்றனர். இதே போன்று வவுனியாவிலும் சமீபகாலத்துக்கு முன்பு பொலிஸ் பகுதியும் இராணுவமும் மோதிக் கொண்டது தெரிந்ததே.

இதைப்பற்றிக்கேட்க நீங்கள் யார்? என்ன உரிமை இருக்கின்றது என்று ஒரு சில ராஜாக்கும்பலும், சங்கர சம்போக்களும் கேட்கலாம். இவர்கள் மட்டுமல்ல வவுனியா உத்தியோகப் பற்றற்ற எம். பியின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு நெடுங்கேணி போன்ற ஊர்களிலே ஊர் மக்களை ஏமாற்றித்திரிபவர்களும், பாதிராத்திரியிலேபக்கத்து வீட்டுக்குள் நுழைந்து பாதி மீசையைப் பறிகொடுத்ததுகளும், களவுபோய் விட்டது என்று கூறி பாடசாலைக் கட்டட மொன்றுக்கு வெட்டி வைத்த திராந்திகளை நடு நிசியிலே கடத்தியதுகளும் கூடக் கேட்கலாம். எங்களுக்கு இதைப்பற்றிக்கேட்க உரிமை இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன, அதைப்பற்றி நாங்கள் சிந்திக்கவுமில்லை வருத்தப்படவுமில்லை. ஆட்டுச்சொந்தக்காரனின் பயிரை ஆடு தின்றுவிட்டால் அதற்காக அடுத்த வீட்டுக்காரன் வழக்குப் போடவேண்டிய அவசியமிருக்காதல்லவா?

ஆனால் மோதலின் முடிவு தான் பொது மக்களைப் பெரிதும் பாதிக்கக் கூடியதாய் இருக்கின்றது. இ. போ. ச ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யத்தொடங்கி விடுகின்றார்கள். பஸ்சுக்காகக் காத்துக் கொண்டிருந்து கொட்டாவி விடவேண்டிய நிலைதான் பிரயாணிகளுக்கு. அது மட்டுமா? டிப்போவடியில் பஸ்சுக்கு நிற்கும் பெண்மணிகளைப் பார்த்துக் கொண்டு சும்மா நிற்பார்களா இராணுவத்தினர்? கட—புட சிங்களம் பேசுவார்கள்—கண்ணடிப்பார்கள்—சைகைசெய்வார்கள் அப்பப்பா அவர்களின் குரங்குச்சேட்டைகளை எப்படித்தான் எழுத்துருவாக்கிக் கூற முடியும். ஒரு பெண்ணின் ஆட்சியிலே மற்றைய (தமிழ்) பெண்களின் கதி இப்படியா போகவேண்டும்?

வைத்திய சாலைக்குத்தான் பெண்கள் நிம்மதியாகப் போக முடிகின்றதா? இல்லவே இல்லை. நோயின் வேதனையால் நடக்கவே சக்தியற்றுத் தள்ளாடிச்செல்பவர்களைக் கூட கேலியும் கிண்டலும் செய்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களின் தன்மானமற்ற செயலால் பெண்மணிகள் இரத்தக் கண்ணீர் சிந்திக் கொண்டு செல்கின்றார்கள்.

பயங்கரவாத நிகழ்ச்சிகள் நடைபெற்ற போது ஒரு சில இராணுவத்தினரைத் தவிர வேறு எவருமே முல்லைத்தீவில் இருக்கவில்லை. அப்போதெல்லாம் இப்பிரதேசம் அமைதிப் பிரதேசமாக இருந்ததாம். இப்போது என்ன நடந்ததோ அமைதியைக் குலைத்து விட்டதோ தெரியாது. மீண்டும் பழையபடி இராணுவக் கும்பல் வந்து குவிந்து விட்டது. முல்லைத் தீவிலே இராணுவம் எதற்கு? வல்வெட்டித் துறையில் கள்ளக் கடத்தல் என்று கூறி இராணுவம் குவிக்கப்பட்டிருக்கின்றதே? அதைப்போல் முல்லைத்தீவிலும் கள்ளக்கடத்தல் என்று கூறித்தான் குவித்து வைத்துள்ளார்களா? அல்லது இ. போ. ச. ஊழியர்களுடன் மோதிக்கொள்ளவா? பயங்கரவாதிகள் என்றழைக்கப் படுபவர்கட்குப் பயந்து ஆட்சியாளர்கள் இராணுவ பலத்தைக் கூட்டினார்கள்—ஆனால் தமிழ்ப் பகுதிகளிலே குவித்து வைத்துள்ளார்கள்? பயங்கர வாதிகள் எங்கே உருவானார்கள்? தமிழ் பகுதியிலா? சிங்களப் பகுதியிலா? எந்தத்தீங்கும் செய்யாத தமிழனை ஏன் இராணுவத்தைக்கொண்டு வதைக்கின்றீர்கள்—வாட்டுகின்றீர்கள்.

மேளம் தட்டித் தாளம் போட்டு—மாலை சூட்டி மந்திரிமாரை வரவேற்போரே! இதைத்தட்டிக் கேட்கத் துணிவுண்டா? ஆளும் கட்சியின் அடிவருடிகளே இப்படியான சந்தர்ப்பங்களில் நீங்கள் மௌனம் சாதிப்பது ஏன்? அமைதியான பிரதேசங்களின் அமைதியைக் குலைப்பது ஆட்சியாளருக்கு ஏதோ இன்பத்தைக்கொடுக்கின்றதுபோல் தெரிகின்றது. அந்த இன்பத்தில் பங்கு கொள்ளத்துடிக்கும் உங்கள் இதயம் இதைப் பற்றி எல்லாம் ஏன் சிந்திக்கப்போகின்றது. ஏதோ அரசாங்கத்துடன் ஒட்டி உறவாடித்தான் உரிமையைப் பெறவேண்டும் என்று என்றோ ஒரு நாள் நீங்கள் ஊளையிட்டது போல் கேட்டது. இன்று உதைத்துத் தள்ளியும் ஒட்டி உறவாடிக் கொண்டுதானிருக்கின்றீர்கள். ஒரு நாள் உங்களிடமும் இராணுவம் வரலாம் முட்டி மோதிக்கொள்ள! கவனம் ஏனெனில் பொது மக்களை மட்டும் தாக்கி வந்த ராணுவம் இப்போது வவுனியாப் பொலிஸ் — முல்லைத்தீவு இ. போ. ச. போன்ற அரசாங்கப் பகுதியினரையும் தாக்கத்தொடங்கி விட்டது. இவ்வளவு தூரம் முன்னேறியுள்ள இராணுவம் எதிர்காலத்திலும் மேலும் முன்னேறாமல் விட்டு விடுமா?

—கேணி வண்ணன்
நெடுங்கேணி

# 'தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்ந்து புறக்கணிக்கப்படின் இலங்கையின் ஒருமைப்பாடு ஒரு கேள்விக் குறியாகும்!

## நம்பினால் நம்புங்கள்! குமாரசூரியரே சொன்னார் இப்படி!

'நமது தமிழ்மொழி நமது அன்னை ஊட்டிய பாலோடு கலந்து நம் உடலில் ஊறுகிறது.

(வீரகேசரி 10-1-72)

• 'தமிழ் நாட்டில் இருந்து வரும் இலக்கியங்கள் கலாசாரங்கள் ஆதியன வியாபார ரீதியில் வருவதைத்தான் நாம் வெறுக்கிறோம். பரிவர்த்தனை நிலையில் என்றால் நாம் அவற்றைக் கைகூப்பி வரவேற்கிறோம்.'

(தினபதி 11-1-72)

• 'முழுவெற்றியையும் பெறுவதற்கு, பத்திரிகை சஞ்சிகையாளர்கள் எழுதினால் மட்டும் போதுமென்று இருந்துவிடாமல் சஞ்சிகைகளை வியாபாரரீதியில் நடத்தவேண்டும். இந்த முயற்சியில் ஈடுபடாவிட்டால் அவர்கள் எழுத்துலகையே மறந்துவிட வேண்டிய சூழ்நிலை உருவாகும்.'

(வீரகேசரி 10-1-72)

'இன்று இலங்கையில் வெளியாகும், அத்தனை தமிழ் சஞ்சிகைகளும் எனக்கு அனுப்பப்படுகின்றன. இவையெல்லாம் நான் அமைச்சராக இருப்பதால்தான் அனுப்பப் படுகின்றன. அப்படி அனுப்பப்படும் எல்லாப் பத்திரிகைகளுக்கும் என்னால் பணம் செலுத்த முடியாது. நான் அமைச்சர் பதவியை இழந்து விட்டால் ஒரு சஞ்சிகைகூட எனக்கு வராது என்பதும் எனக்குத் தெரியும்'.

(வீரகேசரி 11-1-72)

'தமிழ்நாடு எமது தாய் நாடு. இப்படி யில்லாவிட்டாலும் அது அந்நியநாடல்ல எமது அயல நாடு.'

(தினகரன் 10-1-72)

## குப்பிழான் தமிழ் விழாவில் சுதந்திரன் ஆசிரியர் எச்சரிக்கை!

"வங்க மக்கள் தங்கள் சுதந்திரப் போராட்டத்தில் வெற்றியீட்டி, வங்க மொழியை தங்கள் நாட்டின் ஆட்சிமொழியாக்கி, அதற்கு முடி சூட்டி, அந்த வெற்றிக் களிப்பில் இன்று மூழ்கிப் போயிருக்கிறார்கள். வங்க மக்களின் சுதந்திரப் போராட்ட வெற்றி, ஈழத் தமிழினத்துக்கு புதிய தெம்பைக் கொடுத்திருக்கிறது.

"வங்க மக்களின் மொழியுரிமை மறுக்கப்பட்டது; தொழில் உரிமை மறுக்கப்பட்டது. வங்கமக்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டனர் வங்கம் மேற்கு பாகிஸ்தானின் சுரண்டல் நாடாக அடிமைப்பட்டுக்கிடந்தது.

"இந்நிலையை மாற்றியமைத்து வங்கத்துக்கு விடுதலை பெறவேண்டும் என்று வீர சுதந்திர உணர்ச்சி கொண்டு பொங்கியெழுந்தனர் வங்கத்து மக்கள். அவாமி லீக் கட்சியின் கீழ்—ஷேக் முஜிபுர் ரகுமான் தலைமையில் வங்கத்துக்கு மாநில சுயாட்சி கோரினர். சனநாயக முறைப்படி நடைபெற்ற தேர்தலிலும் வங்கமக்களின் இந்த அபிலாஷையை முன்வைத்து அவாமி லீக் போட்டியிட்டு பெரும் வெற்றியீட்டியது. ஆனால் மேற்கு பாகிஸ்தானின் இராணுவ ஆட்சி வங்க மக்களுக்கு மாநில சுயாட்சி வழங்க மறுத்து—அவர்களைப் படுகொலை செய்து அழித்தொழித்துவிடும் முயற்சியில் இறங்கியது.

"இந்த அக்கிரமத்தை எதிர்த்து—இரத்தத்தடாகத்தில் நீந்தி—இலட்சக்கணக்கான வங்காளிகள் தங்கள் உயிரையும், உடமைகளையும் பலி கொடுத்து—தியாகத்தீயில் குளித்து எண்ணற்ற துன்பங்களை தாங்கிக் [illegible] போராடி இன்று [illegible] பெற்றுள்ளது வங்க மண்.

"ஒரு இனத்தின் உரிமைகள் அபிலாஷைகள் புறக்கணிக்கப்பட்டு அந்த இனம் நசுக்கப்பட்டால் தனது சுதந்திரத்தை நிலை நாட்ட எந்த முறையையும் கையாளுவதற்கு அந்த இனம் தயங்காது என்பதை வங்கம் எடுத்துக் காட்டி விட்டது.

"ஈழத்தமிழ்த் தேசிய இனத்தின் சனநாயக பூர்வமான மாநில சுயாட்சிக் கோரிக்கையை அங்கீகரிக்க தொடர்ந்து மறுத்து வரும் சிங்களத் தலைவர்கள், பாகிஸ்தான் கற்றுக் கொடுத்த பாடத்தைப் புரிந்து கொண்டு—தமிழினத்தின் உரிமைகளை, சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பார்களானால் எதிர்காலத்தில் இலங்கையின் ஒருமைப்பாடு நிலைக்கும். இன்றேல் அதுஒரு கேள்விக் குறியாகி விடும்"—இவ்வாறு குப்பிழான் விக்கினேஸ்வர வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் இறுதியாகப்பேசிய சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் குறிப்பிட்டார்.

31-12-71, 1-1-72 இரு நாட்களிலும் இவ்விழா நடைபெற்றது. முதல் நாள் தமிழ் விழாவை உடுவில் பா. உ. திரு வி. தர்மலிங்கம் குத்துவிளக்கேற்றி தொடக்கி வைத்துப் பேசுகையில், தமிழ் விழாக்கள் நடத்துவதில் மட்டும் போதாது—தமிழனுக்கு தனி அரசு ஒன்று அமைத்தால் மட்டுமே தமிழ் மொழியை பாதுகாத்து வளர்க்க முடியுமென்று குறிப்பிட்டார்.

முதல் நாள் நிகழ்ச்சிகளுக்கு திரு. க. கணேசலிங்கம் தலைமை தாங்கினார். பல சிறப்பு சொற்பொழிவுகளுடன் கருத்தரங்கும் [illegible] பெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு திரு. ஆ. மகாலிங்கம் தலைமைதாங்கினார். 'சிறுமை கொண்டவர் செத்துமடிந்திடின்' என்னும் தலைப்பில் கவிஞர் கந்தவனம் தலைமையில் கவியரங்கு நடைபெற்றது. புலவர் பார்வதிநாதசிவம், இரசிகமணி கனக செந்திநாதன், செ. நடராஜா, செல்வி. புஷ்பா செல்வநாயகம், புதுமைலோலன், ஆகியோர் பேசிய பின் இறுதியாக சுதந்திரன் ஆசிரியர் சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார். தனக்கு முன் பேசிய திரு. புதுமைலோலனின் நவீன சோஸலிஷ கருத்துக்களை மிகவும் வன்மையாகக் கண்டித்து, இந்த நாட்டின் தமிழ் மக்களுடைய உரிமைகள் யாவும் கொடுக்கப்பட்டாலொழிய உண்மையான சோஸலிஷத்தை அடைய முடியாதென்று கூறி திரு. புதுமைலோலனுக்கு மேடையிலிருக்கும் பொழுதே சுடச்சுடப் பதில் கொடுத்தார் சுதந்திரன் ஆசிரியர்.

செல்வி. கே. செல்லத்துரையின் இன்னிசை விருந்துடன் தமிழ் விழா நிகழ்ச்சிகள் நிறைவெய்தின.

(குப்பிழான் நிருபர்)

### குப்பிழான் விக்கினேஸ்வரா சனசமூக நிலையம்

குப்பிழான் "விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தின் புதிய வருடத்துக்கான பொதுக்கூட்டம் 12. 1. 72 அன்று நடைபெற்றது. பின்வருவோர் இவ்வருட உத்தியோகத்தவர்களாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்—திரு. வீ. பொன்னம்பலம் உபதலைவர்— திரு. மு. தர்மபாலன் செயலாளர்—திரு. க. பாலசுந்தரம், உபசெயலாளர்—திரு. கா. செல்வரத்தினம், பொருளாளர்—திரு சி. இராசதுரை. பாதுகாவலர்கள், திரு. த. சிறிஸ்கந்தராசா, திரு. க. ஆனந்தநாதன். 10 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

சங்கப்பலகை

## சோதிட வாசகம்

ஆசிரியர்கள்:- அளவெட்டி த. கணபதிப்பிள்ளை, மு. சின்னப்பு.

விலை:- முதலாம் புத்தகம் ரூபா 2-75, இரண்டாம் புத்தகம் ரூபா 2-25.

சோதிடம் என்பது ஓர் அருங்கலை. சோதிடத்தைப் பிழைப்பாகக் கொள்ளாமல் அதை ஒரு கலையாகக் கருதி முறையாகவும் ஒழுங்காகவும் அதைக் கற்றுப் பலாபலன்களை எடுத்துக் கூறும் ஆற்றல் படைத்த சோதிட மேதைகள் பலர் ஈழத்தில் இருக்கிறார்கள். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் அளவெட்டியைச் சேர்ந்த திரு. த. கணபதிப்பிள்ளையும், திரு. மு. சின்னப்பு அவர்களுமாவர். இவர்கள் இருவரும் சோதிடத்தில் பெயரும் புகழும் பெற்றவர்கள்.

தாங்கள் அறிந்த சோதிட இரகசியங்களை ஏனையோரும் அறியவேண்டி, எல்லோரும் புரிந்து கொள்ளும் தமிழில் 'சோதிட வாசகம்' முதலாம் இரண்டாம் புத்தகங்களை வெளியிட்டுள்ளனர். முதலாம் புத்தகத்தில் சோதிடத்தின் ஆரம்பப்படிகளும் இரண்டாம் புத்தகத்தில் இரகபாவங்களைப் பற்றியும் இடம் பெற்றுள்ளன.

சோதிடக் கலையைப் படிக்க விரும்புவோருக்கு இந் நூல்கள் நிச்சயம் பயன்படும் என்று கூறலாம்.

யாழ்ப்பாணத்தில் கிடைக்கும் இடங்கள்:- ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். மு. சின்னப்பு இளைப்பாறிய ஆசிரியர், அளவெட்டி.

கொழும்பில் கிடைக்கும் இடங்கள்:- வேல் முருகன் ஸ்ரோர்ஸ், 285 ஏ, காலிவீதி கொழும்பு 6 ஆனந்தபவான் நொறிஸ்வீதி, கொழும்பு 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவரா சொன்னார்? இருக்காது! நம்பமுடியவில்லை!

'தமிழர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் சமத்துவத்துடனும் சம சந்தர்ப்பம் பெற்றே வாழ்வார்கள்! அடிமைகளாக வாழமாட்டார்கள் என்பதை கலாசார அமைச்சர் இருக்கும் இந்த அவையில் கூற விரும்புகிறேன்.'

"இலங்கைத் தீவு சிறியதாக இருந்தாலும் அதில் வாழும் ஒவ்வொரு இனமக்களுக்கும் தனித்தனி வகையான கலாச்சாரமும் பண்பாடும் கலைகளும் உள்ளன. அவற்றை நாம் பேணிக் காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்."

"தமிழன் எங்கிருந்தாலும் அவனது மொழி கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை வேறு எவரும் அழித்துவிட முடியாது — தமிழ் மக்கள் தாங்களாகவே அழிக்க முற்பட்டால் தவிர"

"மொழி உணர்வு படித்துத்தான் பெறுவது மட்டுமல்ல — அது இரத்தத்திலிருந்து உருவாகுவதாகும். எனக்குத் தமிழ் தெரியாது என்று சிலர் கூறுகின்றனர். அது உண்மைதான் ஆனால் நான் மேடையில் ஏறிப்பேச ஆரம்பித்ததும் அந்த செந்தமிழ் எனது இரத்தத்திலிருந்தே ஊற்றெடுக்கின்றது. இரத்தத்திலிருந்து ஊற்றெடுக்கும் உணர்வுகளை எந்தச் சக்திகளாலும் கட்டுப்படுத்தவோ அழித்து விடவோ முடியாது —"

(அதிர்ச்சியடைந்து விடாதீர்கள் — மேற்கூறிய கருத்துக்கள் அனைத்தும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் யாரும் சொன்னதல்ல — சாட்சாத் குமாரசூரியர் வாயிலிருந்து வெளிவந்திருப்பவை. ஆதாரம் :— தினபதி 17-1-72, ஈழநாடு 18-1-72)

## இந்துப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை முழுவதற்கும் ஒரே பல்கலைக்கழகம் என்பதை நாடாளுமன்றத்தில் எதிர்த்துப் பேசி எதிர்த்து வாக்களித்த கட்சி தமிழரசுக் கட்சி யொன்றே. தமிழரசுக் கட்சியின் சார்பில் பல்கலைக் கழகத் திருத்த மசோதாவை எதிர்த்துப் பேசிய கோப்பாய் பா: உ: ஆணித்தரமான வாதங்களையும், கருத்துக்களையும் எடுத்துரைத்தார். பல இனங்கள், பல மொழிபேசும் மக்கள் வாழும் நாடுகளில் எல்லாம்—சோசலிச நாடுகள் பலவற்றிலும் கூட ஒவ்வொரு மொழிபேசுவோருக்கும் தனித் தனிப் பல்கலைக் கழகங்கள் தரப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிப்பேசினர்.

திரு: கதிரவேற்பிள்ளையின் வாதங்களுக்கு கல்வி அமைச்சர் பதிலளிக்கவில்லை.

### திறமை அடிப்படை நிராகரிப்பு!

மாசோதாவின் நான்காவது ஷரத்துக்கு திரு. தர்மலிங்கம் திருத்தம் கொண்டு வந்திருந்தார்: அந்தத் திருத்தம் மூலம் சட்டபூர்வமாக இலங்கையில் வசிப்பவர்கள் எவர்களாக இருந்தாலும் அவர்கள் எல்லோருக்கும், பாரபட்சமின்றியும், திறமைச்சமையவும் பல்கலைக் கழக கல்வி வசதியளிக்கப்படவேண்டும் என்று கூறியது.

திறமைச்சித்தியின் மூலமே மாணவர்கள் தெரிவு செய்யப்படவேண்டும் என்ற மேற்படி திருத்தமும் கல்வியமைச்சரால் நிராகரிக்கப்பட்டது:

# ஈழத்தமிழர் நீதி பெற்றிட....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"மனித உரிமைக்கு முதல் மதிப்பும், முழு மதிப்பும் தந்த ஒரு மாபெரும் மனிதனின் தலைமையில் நமது சுதந்திர ஆட்சி நடைபெறத் தொடங்கியது.

எனவே எங்கே மனித உரிமைக்கு கேடு நேர்ந்தாலும் உடனேயே அதற்கு எதிர்ப்புக்குரல் எழுப்பும் உரிமை உடையவர்களாக நாம் வளர்ந்துவருகிறோம்:

அண்டையிலே பாகிஸ்தான் அரசு மனிதாபிமான அறிவு நெறியை மீறி மக்களைக் கொடுமைப்படுத்தியது.

உடனேயே நமது அறிவு நெஞ்சம் கொதித்தது. ஆண்மைத் தோள்கள் துடித்தன; வல்லரசு வல்லூறுகளைக்கூட பொருட்படுத்தாமல் அந்த மக்களுக்கு விடுதலை தேடித் தருவதில் முன் நின்றோம்.

கிழக்கு வங்கத்திலே பாகிஸ்தான் நடத்திய கொடுமைகளுக்கு இணையான பல கொடுமைகளை இலங்கை அரசு தனது தமிழ் மக்களுக்குச்செய்துவருகிறது: அந்த மக்களின் மொழி உரிமை, படிப்புரிமை, தொழில் உரிமை என்னும் ஒவ்வொன்றையும் திட்டமிட்டு பறித்து வருகிறது இலங்கை அரசு.

பெரும்பான்மையான தமிழ் மக்களின் பிரதிநிதிகளைக்கொண்ட தமிழ் கட்சிக்கு இலங்கை அரசில் இடமில்லை.

மக்கள் நலன் என்பதைக் கனவிலும் நினைத்திராத சில தமிழ் தனியன்களுக்கே இலங்கை அரசில் அமைச்சர் பதவி கொடுக்கப்படுகிறது.

இந்தப் பொறுப்பற்றவர்களின் பேரால் அந்த அரசு தமிழ் மக்களின் உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்துக் கொண்டுவருகிறது. இந்த நிலை நீடித்தால் வடக்கு இலங்கையிலும் ஒரு வங்கப் போர்க்களம் உதயமாகி விடுமோ என்றே அஞ்ச வேண்டி உள்ளது.

அரசியல் கணக்கில் இந்தியா வேறு நாடு; இலங்கை வேறொரு நாடு. ஆனால் மனிதாபிமானம் என்று பார்க்கும்போது நிலமகளின் நெஞ்சிலே கீறப்பட்டு உள்ள நாட்டு எல்லை என்னும் ரத்தக்கோடு அழிந்துவிடுகிறது.

அப்படி ஒரு எல்லைக் கோட்டையே தாண்டமுடியாத வேலியாகக் கருதிக்கொண்டு ஓர் அரசு தன் மக்களில் ஒரு சாராரின் அடிப்படை உரிமையை பறிக்குமானால் அண்டையில் உள்ள அரசு அனைத் தட்டிக் கேட்க "கொடுத்தும் கொளல் வேண்டும் மன்ற அடுத்திருந்து மாறுஏ செய்வாண் பகை" என்பது திருக்குறள்.

இந்தியாவோ தமிழ் மக்களோ திரண்டு எழுந்து இலங்கையை முற்றுகையிட வேண்டும் என்று நாம் சொல்லவரவில்லை அண்டை நாடுகளை தூண்டுவதன் மூலமும் ஐ. நா. மன்றத்திலே இதை எடுத்துரைப்பதின் மூலமும் இலங்கைத் தமிழர்களுக்கு நாம் உதவலாம்.

அதே போல் இலங்கை அரசுக்கு நியாயத்தை எடுத்துச் சொல்லவும் தேவை ஏற்பட்டால் அதை எச்சரித்து வழிப் படுத்தவும் நாம் தயங்கக்கூடாது:

எண்ணாயிரம் சமணரைக் கழுவேற்றியதையும் ஒரு திருநாவுக்கரசரை கால்வாயில் தூக்கிப் போட்டதையும் பார்த்துக்கொண்டு மக்கள் சும்மா இருந்தகாலமல்ல இது!

மக்களின் உரிமைகளை மதிப்பிடவேண்டும் என்று குரல் கொடுக்க உலக நிறுவனமே தோன்றியுள்ள இந்தக் காலத்திலும் சிறுபான்மையினரின் உரிமையைப் பறிக்கும் இலங்கை அரசு தட்டிக் கேட்பாரின்றி போய்க்கொண்டிருப்பது அண்மையில் உள்ள நமக்குத் தான் கேவலம்.

எனவே அவதிப்படும் ஈழத் தமிழ் மக்களுக்கும் உடனடியாக உதவிக்கரம் நீட்ட இந்திய மக்கள் முன்வரவேண்டும்."

## சோசலிசமாம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தது. அது மட்டு மன்றி, பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் கூட தனிச் சிங்களமாகவே அமைந்திருந்தது. மருந்துக்குக் கூட தமிழையோ ஆங்கிலத்தையோ காணமுடியாத சோசலிசத்தால், தமிழையும் ஆங்கிலத்தையும் மட்டுமே அறிந்த தமிழ் வாலிபர்கள் பாடு பெருந்திண்டாட்டமாகி விட்டது; இதுதான் சோஷலிசம்!

## குணசேன...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தென்று உண்மையில் கட்சி முடிவெடுக்குமானால் — அந்த நிலைமைச் சந்திக்கவும் தமிழினம் தயங்காது — அது வேறு விடயம். ஆனால் கட்சி தனிநாடுபற்றி எவ்வித முடிவும் எடுக்காமல் — தொடர்ந்தும் சமஷ்டியையே வலியுறுத்திவரும் இன்றையநிலையில், தமிழரசுக்கட்சி வெளிநாட்டு ஆயுத உதவியுடன் தனிநாட்டுக்குப் போராடப் பேசவதாக குணசேன ஏடுகள் முழுப்பொய்ச் செய்தியை வெளியிட்டதன் நோக்கம் என்ன?

இதை 14-1-72 'சன்' ஏடே புட்டுவைத்துவிட்டது. தமிழரசுக் கட்சியை அவசரகாலச் சட்ட விதிகளைப் பயன்படுத்தி தடைசெய்யும்படி அரசைக்கோர வேண்டுமா என்பது பற்றி ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஆலோசித்து வருகிறார்கள் என்றும் 'சன்' செய்தி வெளியிட்டுளவது.

இதிலிருந்து இந்த ஏடுகளின் நோக்கம் கட்சியைத் தடைசெய்விப்பது தான் என்பதும், அதற்கு ஒரு தூண்டுகோலாக 'தனிநாடு' செய்தியை தயாரித்து வெளியிட்டிருக்கின்றன என்பதும் தெரிகிறதல்லவா?

வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டெண்ட், குறித்த செய்தியை குணசேன பத்திரிகைகளுக்கு அனுப்பியதாக கூறப்படும் நிருபரிடம் விசாரணை நடத்தியபோது, 'தினபதி, சன், ஏடுகளில் வந்தபடி, தான் செய்தி அனுப்பவில்லையென்றும், திரு. அமிர்தலிங்கம் அப்படிப்பேசவில்லையென்றும் தெரிவித்துள்ளாராம்! இதிலிருந்து குணசேன பத்திரிகை அலுவலகத்திலேயே தயாரிக்கப்பட்ட செய்தி இது என்பது தெரிகிறதல்லவா?

திரு: அமிர்தலிங்கத்தின் மறுப்புக் கடிதத்தை உடனடியாக பிரசுரிக்காமல், அமிர்தலிங்கத்தை தாக்கி Mid summer madness (கோடைக்காலப் பைத்தியம்) எனும் ஆசிரியர் தலையங்கம் எழுதிவிட்டு மறுநாளே அமிர் அடிதத்தை பிரசுரித்துள்ளது 'சன்' ஏடு.

காந்தியையும், ஜின்னாவையும், முஜிபுரையும், டிவேலராவையும் கூடத்தான் பைத்தியங்கள் என்றார்கள் ஆதிக்கபுரியினர் — முடிவில் பைத்தியங்கள் யார் என்பதை உலகம் அறிந்தது. இதை நினைவு படுத்தி வைக்கிறோம்.

## நினைவில் நிற்பவை

கரிகாலன் எழுதும் 'நினைவில் நிற்பவை' தொடரின் இறுதிக் கட்டுரை இடமின்மையால் இவ்வாரம் இடம் பெறவில்லையென்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

— ஆ-ர்

## நன்றி நன்றி!!

புதுவருடம், பொங்கல் விழாவையொட்டி வாழ்த்துச் செய்திகள் அனுப்பி வைத்த அனைவருக்கும் எனது இதயங் கலந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

—ஆசிரியர்.

## இதோ மற்றொரு 'கலப்பு' தமிழர்!

"சிங்கள இலக்கியத்துடன் தமிழ் இலக்கியமும் ஒன்றிக் கலக்க வேண்டும். இந்தநாட்டில் தனிச் சிங்கள அரசோ, தனித் தமிழரசோ இஸ்லாமிய அரசோ உதயமாக முடியாது."

## தமிழரசு மாணவர் முன்னேற்றக் கழகம்!

மொழி, இன விடுதலை உணர்ச்சி மிகுந்த தமிழ் பேசும் மாணவர்களை அனைத்திலங்கை ரீதியில் ஒன்றுபடுத்தி ஒரு கட்டுப்பாடான இயக்கமாக 'இலங்கைத் தமிழரசு மாணவர் முன்னேற்றக் கழகம்' எனும் ஓர் அமைப்பை ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன;

இந்த அமைப்பில் சேர விரும்பும் மாணவ மாணவிகள் தங்கள் பெயர், வயது படிக்கும் பாடசாலை, ஆகிய விபரங்களுடன்,

அமைப்பாளர்,

இ. த. மா. மு. கழகம்,

194 ஏ, பண்டாரநாயக்க வீதி,

கொழும்பு—12;

எனும் முகவரிக்கு எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்;

—யாழ். கலாசார விழாவில் மட்டுநகர் மேயர் தியாகராசா.

# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடு செல்வதென்றும், இரண்டு நாட்கள் கழித்து திரு: அமிர்தலிங்கம் இங்கிருந்து புறப்படுவதென்றும் அவரை நாம் திருச்சி விமான நிலையத்தில் சந்தித்துக்கொள்வதென்றும் தீர்மானித்துக் கொண்டோம்.

இதன்படி, பெப்ரவரி 17ம் நாள்—வழமையான சுங்கப் பரிசோதனைகள் எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு நானும் எனது நண்பரும் பலாலியிலிருந்து திருச்சி நோக்கி விமானத்தில் பறந்துகொண்டிருந்தோம்;

அண்ணாவின் அழகு தமிழ் திருநாட்டை எண்ணும் போதே இதயமெல்லாம் இனித்திடுகிறது— அத்திருநாட்டுக்கு செல்ல நினைக்கும் போது சிந்தையெலாம் களிக்கிறது. செல்லும்போதோ அத்திருமண்ணில் எப்போது காலடி வைப்போம் என்கின்ற அவசர ஆர்வம் மேலிடுகிறது; இந்த ஆர்வ உணர்வுடன் நான் பறந்துகொண்டிருந்தேன்.

அடடா — என்னுடன்கூட வரும் எனது "நியூமாரலஜி" நண்பரை உங்களுக்கு இன்னும் அறிமுகப்படுத்தவில்லையே...! அவர்தான் இலங்கை தமிழ் பண்பாட்டுக் கழகத் தலைவர் திரு. ஆ. இராசரத்தினம். அவருக்கு அதிர்ஷ்ட எண்களில் அசையாத நம்பிக்கை. எதைச் செய்தாலும், எதையெடுத்தாலும் இலக்கத்தை முதலில் விசாரிப்பதே தவறாதவழக்கம். ஒருவர் எந்த விஷயத்தில் அதிக ஆர்வம் காட்டுகிறாரோ அந்த ஆர்வத்தைக் கொண்டே, அவர் பிறந்த திகதியைச் சடாரெனக்கேட்டு ஆச்சரியத்தில் மூழ்கடித்து விடுவார் இந்த மனிதர்.

ஒரு சின்ன உதாரணம். தமிழ் நாட்டுப் பிரயாணத்துக்காக கொழும்பிலிருந்து புகைவண்டியில் யாழ் நகர் நோக்கி வந்து கொண்டிருந்தோம். அதே புகைவண்டியில் எம்முடன் கூட ஒரு இஸ்லாமிய தமிழ் நண்பரும் இருந்தார். அவரும் மறுநாள் நாங்கள்செல்கின்ற அதே விமானத்தில் தமிழகம் செல்வதற்கே வந்து கொண்டிருந்தார்; பொழுதுபோக பேச்சில் ஈடுபட்டிருந்தோம். அந்த இஸ்லாமியத் தமிழர் திருகோணமலைப்பகுதியைச்சேர்ந்தவர், நல்ல தமிழ்ப்பற்றுள்ளவர்; நமது தமிழரசுப் பொதுச் செயலாளர் அண்ணன் அமிர்தலிங்கம் மீது அதீத வாஞ்சையுள்ளவர்—அமிர்தலிங்கம் அவர்கள் எங்கு பேசினாலும், அவரது உரையைத் தவறாமல் தாம் கேட்பதுவழக்கம் என்று அவர் பெருமையுடன் எம்மிடம் கூறினார்.

அந்தச் சமயத்தில் திடீரென்று, நண்பர் இராசரத்தினம் குறுக்கிட்டு அவரை நோக்கிக் கேட்டார், 'நீங்கள் நாலாம் திகதியில் பிறந்தவர்தானே?" என்று; அந்த இஸ்லாமிய நண்பர் ஆச்சரியத்துடன், ஆமாம், அதை நீங்கள் எப்படிக் கண்டுபிடித்தீர்கள்' என்று கேட்டு அதிசயப்பட்டதைக் கண்டிருக்கிறேன்—

நண்பர், திருச்சியில் நாம் இறங்கி நிரப்பிக்கொடுக்க வேண்டிய படிவங்களை விமானத்துக்குள் வைத்தே நிரப்பிக் கொண்டிருந்தார்: என் சிந்தனையோ வானவெளியில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.





அருள் விருந்து

"பிரதி பலனை எதிர்பார்க்காதவன் பெருமகன் ஆகிறான்!

—தர்ம சக்கரம்.

மில்க் வைற் தயாரிப்புகளை வாங்கி அதிக லாபம் அடையுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரதேசக் கூச்சலையெழுப்பித் தமிழினத்தை மீண்டும் கூறுபோடத் தமிழ்பகைவர்கள் சூழ்ச்சி!

## வன்னியரும் வரோதயரும் வளர்த்த தமிழின ஒருமைப்பாட்டை சிதைத்திடசதி!

## தமிழினமே விழித்திடு! வீணர்களை விரட்டிடு!

## தினபதியார் குழி தோண்டுகிறார்! இராசதுரை அவர்களே! கவனம்! கவனம்!!

இந்நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்தின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் குழிபறிக்கும் வேலையில் தமிழ்ப் பகைவர்கள் மீண்டும் இப்போது தீவிரமாக இறங்கியுள்ளனர்; அரசியல் ஓநாய்கள், நாக்கைத் தொங்கப் போட்டபடி தமிழ்பேசும் மக்களின் ஒற்றுமையைக் குலைத்து - தமிழினத்தைக் கூறுபோட்டு சின்னாபின்னப்படுத்தி தமிழ் விடுதலைப் போராட்டத்தை சிதறடித்திட திட்டமிட்டு சூழ்ச்சிசெய்துவருகின்றன;

தினபதி 'சொறிநாயோ' தமிழினத்தின் விடுதலை இயக்கமாம் தமிழரசுக் கட்சிக்குள் சிண்டுமுடிந்து கட்சியை சிதறடித்து தமிழ் பேசும் இனத்தை முற்றாக அழித்தொழிப்பதில் தனது சக்தி அனைத்தையும் செலவு செய்து வருகிறது; நாள் தோறும், தமிழினத்தை கூறுபோடக்கூடிய பிரசாரத்தை—தமிழினத்தை மீண்டும் வடக்கு, கிழக்கு மன்னார், வவுனியா என்று பிளந்துவிடும் படுதுரோக விளையாட்டை தினபதியார் வேகவேகமாக முன்னின்று நடத்திவருகிறார்! சிங்கள முதலாளிகள் போடும் எச்சில் இலையை நக்குவதற்காக சழத்தமிழினத்தின் முதுகில் ஓங்கிக் குத்திவருகிறார் தினபதியார்;

### பாதுகாப்பு அரண்

இன்று இந்நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்தின் ஒரே ஒரு பாதுகாப்பு அரணாக விளங்குவது இலங்கைத் தமிழரசுக் கட்சி; யாழ்ப்பாணத் தமிழன் - மட்டுநகர் தமிழன் - மன்னார் தமிழன் - வன்னித் தமிழன் - திருகோணமலைத் தமிழன் - மலைநாட்டுத் தமிழன் என்றெல்லாம் பிரிவினை பேசி பிளவுபட்டுக்கிடந்த தமிழினத்தை ஒரே அணியில் திரட்டி தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டை இந்நாட்டில் உருவாக்கி காட்டியது தமிழரசுக்கட்சி. தமிழ்பேசும் மக்களிடையே இத்தகைய ஒரு உறவையும் ஒற்றுமையையும் உண்டாக்குவதற்கு தமிழரசுக்கட்சி எடுத்த முயற்சிகள் தாம் எத்தனை எத்தனை? அமரர் வன்னிய சிங்கமும், இராஜவரோதயமும், டாக்டர் நாகநாதனும் தங்களுடைய கண்ணீராலும் வியர்வையினாலும் இடைவிடாத உழைப்பினாலும் உருவாக்கியதல்லவா இந்த ஒற்றுமை? இந்தத் தியாகத் தலைவர்களின் எலும்பினாலும் நரம்புகளினாலும் உணர்வினாலும் குருதியினாலும் உருவாக்கப்பட்டதல்லவா இந்த உறவுப்பாலம்! இதை அறுத்தெறிய - முறித்துவிட - தமிழரசுக் கட்சியின் கடைசித் தொண்டன் இருக்கும்வரை அனுமதிக்கமாட்டான் என்பதை தமிழ்த்துரோகி தினபதி சிவநாயகம் புரிந்து கொள்ளவேண்டும். தமிழினத்துக்கு தினபதியார்செய்யும் துரோகத்தை தினபதியார் வணங்கும் பகவான் சத்தியசாயிபாபாகூட மன்னிக்கமாட்டார்.

### தமிழரசே போராடுகிறது

இன்று இந்நாட்டில் ஐக்கிய முன்னணி அரசு ஏனைய அரசியல் கட்சிகளை எல்லாம் விழுங்கி ஏப்பம் விட்டு வருகிறது. தமிழ் காங்கிரஸை ஏற்கெனவே விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டது. ஐக்கிய தேசியக் கட்சியையும் விழுங்க இப்போது முயற்சித்து வருகிறது. தமிழரசுக்கட்சி ஒன்றுதான் ஐக்கிய முன்னணி அரசின் மாயாஜாலவித்தைகளில் மயங்காது - தன் இலட்சியங்களில் இம்மியும் நழுவாது - தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடி வருகிறது. சோஷலிசம் என்ற போர்வையின்கீழ் தமிழினத்துக்கு இழைக்கப்படும் அநீதிகளை அக்குவேறு ஆணிவேறாக அம்பலப்படுத்தி வருகிறது.

தமிழ்பேசும் இனத்தின் மொழி உரிமை, குடியுரிமை, ஆட்சி உரிமை மற்றும் அடிப்படை உரிமைகளை புதிய அரசியல் அமைப்பில் சேர்த்துக் கொள்ள சிங்கள அரசு பிடிவாதமாக மறுத்துவிட்டதால் அரசியல் நிர்ணய சபையிலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறிவிட்டது. கட்சியின் 12 பா. உ.க்களும் அரசியல் நிர்ணயசபையை பகிஷ்கரித்துவருகிறார்கள். தமிழ்பேசும் மக்களை மீளா அடிமைகளாக்கி அழித்தொழிக்கும் தனிச்சிங்கள பௌத்த அரசியல் சட்டம் விரைவில் இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்கள் மீது திணிக்கப்பட இருக்கிறது;

### இருள் நிறைந்த எதிர்காலம்

தமிழினத்தின் எதிர்காலம் இருள் நிறைந்து காணப்படுகிறது. முன்னெப்பொழுதும் இல்லாதவாறு தமிழ்பேசும் மக்கள் ஒற்றுமையாக ஓரணியில் நின்று தமது இன, மொழி விடுதலைக்காக போராடியே தீரவேண்டிய நிலை இன்று தோன்றியிருக்கிறது.

### பகடைக்காய்

தமிழினத்துக்கு வரலாறு காணாத நெருக்கடி ஏற்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில்தான் தமிழினத்தைக் கூறுபோட்டழித்து தமிழ் மக்களின் எதிர்ப்பை முறியடித்துவிட தமிழ்ப் பகைவர்கள் தமிழின் எதிரிகள் - முழுமூச்சுடன் சதிகள் புரிந்துவருகிறார்கள். தமிழரசுக் கட்சிக்குள் ஆளுக்காள் சிண்டு முடிந்து, வடக்கு கிழக்கு என்ற கூச்சலைப் புகுத்தி, கட்சியைப் பிளவுபடுத்திவிட்டால் தமிழினத்தை அழித்துவிடலாம் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால் தமிழரசுக்கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தலை பகடைக்காயாகப் பயன்படுத்த முனைந்திருக்கிறார்கள்.

தமிழரசுக்கட்சிக்குள் இருக்கின்ற எந்தத் தொண்டனும் தலைவனும் எந்தப் பிரச்சினையிலும் சரி வடக்கு கிழக்கு என்று சிந்திப்பதில்லை. தமிழரசுக் கட்சிக்காரனுக்கு வடக்கும் சரி கிழக்கும் சரி தமிழ் மண்ணாகத்தோன்றுகிறதே தவிர வேறு எந்த வேறுபாடும் தெரிவதில்லை. தமிழரசுக் கட்சிக்குள் எந்தப் பதவியும் தொண்டு, சேவை, கொள்கை உறுதி போன்றவற்றின் படையில் வழங்கப்படுகிறதே தவிர வடக்கு கிழக்கு, மன்னார், வவுனியா என்கின்ற பிரதேசக் கண்ணோட்டத்தில் அல்ல. பிரதேச வேறுபாடுகளை ஒழித்த தமிழரசுக் கட்சி தனக்குள் வடக்கு கிழக்கு என்ற பிரதேசக் கூச்சல் கிழம்புவதற்கு சிறிதும் இடமளிக்க மாட்டாது.

### சனநாயக மரபுகள்

தமிழரசுக்கட்சி சனநாயக மரபுகளைப் பின்பற்றும் ஒரு கட்சி. கட்சிக்குள் நடைபெறும் தேர்தல்களிலும் சனநாயக மரபுகளை கட்சி இதுகாலவரை பின்பற்றி வந்திருக்கிறது. இப்பொழுது தலைவர் பதவிக்கு ஏற்பட்டுள்ள போட்டிக்கும் சனநாயக ரீதியில் தீர்வு காணப்படும்.

ஆனால் தமிழரசுக் கட்சிக்குள் தலைவர் பதவிக்கு ஏற்பட்டுள்ள போட்டியை திசை திருப்பி, வடக்கு கிழக்கு என்ற உழுத்துப் போன பிரதேசக் கூச்சலை எழுப்பி தமிழினத்தைப் பிளவு படுத்தி விட தினபதியாரும் மற்றும் தமிழ்ப் பகைவர்களும் செய்யும் சூழ்ச்சிகளை நாம் முறியடித்தே தீருவோம்.

### நச்சுநாகம்

தமிழரசுக்கட்சியை அழித்தொழித்து விடுவதென்று சபதம் செய்திருப்பவர் தினபதி சிவநாயகம். தமிழரசுக் கட்சிக்கு எதிராக நாள் தோறும் விஷமத்தனமான பொய்ச் செய்திகளை வெளியிட்டு வருபவர் தினபதி சிவநாயகம். இந்நாட்டுத் தமிழினத்தின் ஈடு இணையற்ற தலைவர் தந்தைசெல்வா அவர்களை கொஞ்சம் கூட பண்பாடின்றி 'அவிவேக பூரண குரு' என்று கிண்டல் செய்தவரும், தமிழரசுத் தந்தையை 'சூரபத்மனாக' சித்திரித்து கார்ட்டூன் போட்டவரும், தந்தைக்கு வாக்கு மாறிவிட்டதென்று கேலி பேசிய வரும் இதே சிவநாயகம்தான். மார்ட்டினுடன் சேர்ந்து தமிழரசுக் கட்சிக்குள்ளிருந்து நாலு எம். பிக்கள் வெளியேறுவார்கள் என்று எழுதி இறுதியில் மூக்கறுபட்டவரும் இதே சிவநாயகம் தான். தமிழரசுக் கட்சியை பிளவு படுத்த இந்த நச்சு நாகம் எடுத்த ஒவ்வொரு சூழ்ச்சியும் இதுவரை காலமும் முறியடிக்கப் பட்டே வந்திருக்கிறது. இனியும் முறியடிக்கப்படும்.

### குழிபறிக்க முயற்சி?

தமிழரசுத் தலைவர் போட்டிக்குள் தலையிட்டு இராசதுரைக்கு ஆதரவு தெரிவிப்பது போலப் போக்குக் காட்டி கட்சியைக் கிழக்கு வடக்கு என்று பிரிக்க சூழ்ச்சிவலை விரிப்பதுடன் இராசதுரைக்கும் தினபதி சிவநாயகம் குழிபறிக்கிறார் ... கடந்த பொதுத் தேர்தலுக்கு முன் ... துறை நவரத்தினத்திற்கு தலைவராக்குகிறேன் என்று ஆசை காட்டி தமிழரசுக் கட்சியிலிருந்து பிரித்தெடுத்து அரசியற் பிச்சைக்காரராக்கி இன்று நடுத்தெருவில் விட்டிருப்பதுபோல மட்டு நகர் முடிசூடா மன்னன் என்று பெயர் பெற்ற இராசதுரைக்கும் ஆசைகாட்டி மோசம் செய்யும் திருப்பணியில் சிவநாயகம் இப்போது ஈடுபட்டிருக்கிறார்;

திரு. இராசதுரை மீது சிவநாயகத்திற்கு உண்மையான பற்றிருந்தால், பாசமிருந்தால் இராசதுரைக்கு சொற்பஞ்சம் ஏற்பட்டுவிட்டதென்றும் தமிழ் வராது தடுமாறுவதாகவும் தினபதியில் எழுதியிருப்பாரா?

திரு. இராசதுரை சிறந்த தலைவர் என்றும் நிறைய உழைத்தவர் என்றும் தியாகம் புரிந்தவர் என்றும் இப்போது தட்டிக்கொடுத்து சொக்குப்பொடி போடும் சிவநாயகம் 27-10-1971ல் அத்தாணி மண்டபத்தில் தமிழரசுக் கட்சியின் கட்டுக்கோப்பை உடைத்தெறிவதிலும் ஊதித் தள்ளுவதிலும் உற்சாகம் காட்டி வருகிறார் இராசதுரை என்று எழுதி இராசதுரையை தாக்கியதை நாம் மன்னிக்க முடியுமா?

மேற்படி அத்தாணி மண்டபத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது வருமாறு:—

'இப்படியாகத்தானே கட்சியின் கட்டுக்கோப்பையும் ஊதுகுழலின் உழுத்துப் போன உபதேசங்களையும் முறையே வெற்றிகரமாக உடைத்தெறிவதிலும் வீராவேசமாக ஊதித்தள்ளுவதிலும் அளவுகடந்த உற்சாகம் காட்டி வருகிறார்கள் தமிழரசுத் தலைவர்கள்.

'வாழ்க அவர்தம் 'இன் கொன்ஸிஸ்டன்ஸி' — அதாவது கொள்கையற்ற கொள்கை!

'ஊதுகுழலின் உபதேசத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு அமைச்சர்களுக்கு விருந்து வைபவம் நடத்திய முதல் பெருமை மட்டக்களப்பு முதல்வர் திரு. இராசதுரையைச் சார்ந்ததாகும்.

'ஊதுகுழலானது காட்டிக் கொடுக்கும் கயவன் என்றும் தமிழ்த்துரோகி என்றும் வர்ணிக்கும் தபால் அமைச்சர் திரு. குமாரசூரியர் மட்டக்களப்புக்கு சென்ற போது வாழ்த்தும் விருந்தும் நடத்தியவர் திரு. இராசதுரைதான்.

''அதைத் தொடர்ந்து கப்பல் போக்கு வரத்து, உல்லாசப்பிரயாண அமைச்சர் திரு. கலுகல்லே மட்டக்களப்புக்கு சென்றபோதும் அவருக்கு அருமையான ஒரு நல் விருந்தளித்தவர் இராசதுரைதான்.

'கடந்த வாரம் திரு. இராசதுரை உதவி அமைச்சர் ஜுனுப் மஜீத்துக்கு விருந்தளித்து பாராட்டியது மட்டுமல்லாமல் வாழ்த்து ஒன்றும் கூறினார்;

"தற்சமயம் அரை அமைச்சராக உள்ள தாங்கள் விரைவில் முழு அமைச்சர் ஆகிக் கிழக்கு மாகாணத்துக்கு நற்பணியாற்றுவீர்களாக;"

என்பதுதான் திரு. இராசதுரை வாழ்த்திய வாழ்த்தாகும்.'

மேற்கண்டவாறாக எழுதி இராசதுரையின் கொள்கையுறுதியையேகிண்டல்செய்த தமிழ்த் துரோகி சிவநாயகம் இப்பொழுதுஇராசதுரைக்கு ஆதரவுதருவதுபோலக்காட்டிக்கொள்கிறார் என்றால்அது இராசதுரை மீது கொண்ட பற்றினால் அல்ல — இராசதுரைக்கும் தமிழரசுக்கட்சிக்கும் குழிபறிக்கவே என்பதை நாமும் அறிவோம்—இராசதுரையும் அறிவார் என்றே நம்புகிறோம்.

ஏனெனில் சிவநாயகத்தின் தமிழ்த் துரோகப் போக்குகளையும் தமிழரசு விரோதப் போக்குகளையும் நம்மிடம் பல தடவைகளில் சுட்டிக்காட்டி மனவேதனைப்பட்டுள்ளார் திரு. இராசதுரை. அப்படிப்பட்ட இராசதுரையை சிவநாயகத்தால் எப்படியும் மயக்கமுடியாது என்பதிலும் வடக்கு, கிழக்கு ஒற்றுமையையும் தமிழரசுக் கட்சியின் ஒருமைப்பாட்டையும் திரு. இராசதுரை கட்டிக்காப்பார் என்பதிலும் நமக்கு உறுதியான நம்பிக்கையுண்டு;

தலைவர் போட்டிப் பிரச்சினையிட்டு தொடர்ச்சியான ஒரு பொய்ப்பிரசாரத்தை தினபதி சிவநாயகம் நாள்தோறும் நடத்திவருகிறார். திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசு மாநாடொன்றின்போது திரு. இராசதுரை கட்சிப் பொதுச் செயலாளர் பதவிக்கு திரு. அமிர்தலிங்கத்தோடு போட்டியிட்ட நேரத்தில் தந்தை செல்வா குறுக்கிட்டு அடுத்தமுறை திரு. இராசதுரைக்கு போட்டியின்றிப் பெரிய பதவியெதுவும் வழங்கப்படுமென்று உறுதியளித்து இராசதுரையைப் போட்டியிலிருந்து வாபஸ் பெறச்செய்தார் என்றும் அப்படிச் செய்த தமிழரசுத் தந்தை நேர்மை — கண்ணியம் வாக்குறுதி ஆகியவற்றுக்கு கிஞ்சிற்றும் மதிப்பளிக்காது இராசதுரையின் முதுகில் ஓங்கிக் குத்திவிட்டதாகவும் சிவநாயகம் திரும்பத்திரும்ப எழுதிவருகிறார்;

தமிழரசுத் தந்தையின் நேர்மையையும் — கண்ணியத்தையும்— வாக்குறுதியையும் இந்த நாடு முழுவதுமே நன்கறியும்; அவரது நேர்மைக்கு சிவநாயகத்தின் ''சேர்டிபிக்கேட்'' கிஞ்சிற்றும் அவசியமில்லை.

திருகோணமலையில் வைத்து தாம் அத்தகைய வாக்குறுதி எதையும் திரு. இராசதுரைக்கு அளிக்கவில்லை என்றும் அப்படி எவருக்காவது தலைவர் பதவி தருவதாக வாக்களிக்க தமக்கு கட்சியில் எவ்வித அதிகாரமும் இல்லையென்றும் தலைவரை தெரிவுசெய்யும் பொறுப்பு கட்சி அங்கத்தவர்களுடையது என்றும் தந்தை செல்வா அவர்கள் திட்ட

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயாட்சிக்கழகம் வைக்கோல்பட்டறை நாயா? அதன் ஏட்டுக்கு உள்ளது வெறும் வாயா?

## தமிழ்த்தாய் மன்றத்தின் சாட்டை!

தமிழ்த்தாய் மன்றத்துக்கொள்கை பரப்புத்துறைப் பொறுப்பாளர் என்ற காரணத்தால் மன வேதனையுடன்தான் இக்கட்டுரையை எழுதுகிறேன். ஈழத்தில் தமிழர் விடுதலையும் நல்வாழ்வும் பற்றி நினைப்பவர்களிடையே மோதல்கள் இருக்கக் கூடாது என்பது தமிழ்த்தாய் மன்றத்தின் கருத்தாகும். இதுவரை தமிழரசுக் கட்சியை வாய்நிறையத் திட்டிவந்த சுயாட்சிக்கழகத்தினர் இப்போது தமிழ்த்தாய்மன்றத்தையும் தாக்கத் துவங்கிஇருக்கிறார்கள். இந்த வேளையில்நொந்துபோனஉள்ளத்தோடுதான் சுயாட்சிக் கழகத்தினருக்கு பதிலளிக்கிறேன். இது எனது தவறல்ல. நாங்கள் சுயாட்சிக்கழகத்தின் ஏட்டால் தூண்டப்பட்டிருக்கிறோம்.

கல்முனையில் அண்ணாவுக்கு சிலை நிறுவ கல்முனை கன்னித்தமிழ் மன்றத்தினர் முயற்சிகளை மேற்கொண்டபோது, அவர்களுக்கு உதவும் வகையில் கொழும்பில் முடிந்தவரை நிதிதிரட்டி அளிக்க தமிழ்த்தாய் மன்றம் முடிவு செய்தது. முடிவு செய்தபடி பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் அண்ணாசிலை நிதிச்சொற்பொழிவு நிகழ்ச்சி ஒன்றினையும் நாங்கள் ஏற்பாடு செய்தோம் மறைந்த இரும்பு மனிதர் நாகநாதன் அவர்கள் தலைமையில் இச்சொற்பொழிவுநிகழ்ச்சி நடைபெற்றது. டாக்டர் அவர்கள் கலந்துகொண்ட கடைசிக் கூட்டம் இதுவே. இவ்விழாவில் திரட்டிய நிதியை நாங்கள் 'அண்ணா சிலை அமைப்புக் குழுவிடம்' ஒப்படைத்தோம். அவர்கள் நன்றியுடன் நிதியைப் பெற்றுக் கொண்டார்கள்.

அண்ணா நிதி சொற்பொழிவு நிகழ்ச்சியை பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நாங்கள் நடாத்திய அடுத்த ஒரு சில நாட்களிலேயே இலங்கையில் ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது — விழாவில் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கிய நிதி அட்டைகளுக்கான பணத்தினை ஆங்காங்கே சென்று உடனடியாகத் திரட்டிச் சேகரிக்க இயலாத நிலை ஏற்பட்டது. நிதியை ஒன்றுதிரட்டி அன்றைய சிலை அமைப்புக் குழுவினிடம் வழங்குவதில் சிறிது தாமதம் ஏற்பட்டது இதுதான் நிகழ்ந்த கதை.

சுயாட்சிக் கழகத்தின் ஏட்டில் இப்போது "அண்ணா சிலை நிதி எங்கே?" என்று ஏதோ அந்த நிதியை தமிழ்த்தாய் மன்றத்தில் யாரோ சுருட்டிக்கொண்டு போய்விட்டதுபோல் — மன்றத்துக்கு மாசு கற்பிக்கும் விதத்தில் செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறார் அந்த ஏட்டின் செய்தித் தட்டுப்பாடு ஆசிரிய சிகாமணி!

ஈழத்தில் ஒரு விடுதலை இயக்கத்தின் ஏடு என்று சொல்கிறீர்கள் — ஏனையா ... ஆட்சியாளர் செய்யும் ஆயிரம் ஆயிரம் கொடுமைகள் நாட்டில் உண்டே... தமிழ் மொழிப்பற்றுமிக்க தமிழ்த்தாய் மன்றத்தின் தொண்டைக் கிண்டல் செய்து கட்டுரை வெளியிட்டுத்தான் உங்கள் ஏட்டின் முதல் பக்கத்தை ஒதுக்க வேண்டுமா? நீங்கள் என்ன ஆட்சியாளரின் கைக்கூலிகளா? அவர்களும், என்னைச் சுடுகிறார்கள் — நீங்களும் எங்களைச் சாடுகிறீர்கள் — எங்களுக்கு உங்கள் இருவருக்கும் இடையே வேறுபாடு தெரியவில்லையே!

தமிழ்த்தாய் மன்றம் துவங்கிய நாளில் இருந்து ஆற்றிவரும் பணியை நாடு அறியும் — நம்மரும் தமிழர் அறிவர்.

உயிரோடு வாழ்ந்த காலத்தில் — உச்சியிலே ரோசாரியோ பீரிஸ் என்ற கலைஞனை இந்த நாடு தூக்கி வைத்துக் கூத்தாடியது; கொழும்பில் ரோசாரியோ பீரிசை சுற்றி ஒரு கூட்டமே திரிந்தது. அந்த அற்புதமான தமிழ் நடிகன் திருமணம் செய்து ஒருசில மாதங்களில் தன் மனைவியைத் தன்னந்தனியே அனாதையாக விட்டு விட்டுக் கண்களை மூடிக்கொண்டான். அடுத்த நிமிடமே இந்த நாடு ரோசாரியோ பீரிசை மறந்துபோயிற்று.

நாடு மறந்தது — ஆனால் தமிழ்த்தாய் மன்றம் மறக்கவில்லை, 1968ஆம் ஆண்டுக்குரிய 'அண்ணா பதக்கத்தை' நாங்கள் ரோசாரியோ பீரிசுக்கு வழங்கினோம். இப்பதக்கம் காலஞ்சென்ற ரோசாரியோ பீரிசின் துணைவியார் கையில் ஒப்படைக்கப்பட்டது. அதுமட்டுமல்ல ரோசாரியோ பீரிசை இழந்து ஆதரவற்ற அவரது அன்னை சகோதரிகள் ஆகியோருக்கு தமிழ்த்தாய் மன்றம் தொடர்ந்தும் சில உதவிகளைப் புரிந்து வந்தது.

மட்டக்களப்பார் — யாழ்ப்பாணத்தார் என்ற பேதத்தை நொறுக்கி எறியவதற்காக யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த தவில் வித்துவான் தட்சணாமூர்த்திக்கு மட்டக்களப்பில் நடைபெற்ற அண்ணா விழாவில் 1969ஆம் ஆண்டுக்குரிய அண்ணா பதக்கத்தை வழங்க தமிழ்த்தாய் மன்றம் முடிவு செய்தது. 1970ஆம் ஆண்டுக்குரிய அண்ணா பதக்கம் மட்டக்களப்பு ஜீவம் யோசப் அவர்களுக்கு இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் அண்ணாவிழாவில் வழங்கப் படவிருக்கிறது.

ஆட்சியினருக்கு அடிவருடுவோரை — அரசனின் திருப்பாடி வயிறு கழுவுவோரை — தமிழை அழிக்க தமிழ் எழுதுவோரை இந்நாட்டு அரசு கௌரவிக்கும். ஆனால் மான உணர்ச்சியும் — மறத் தமிழ் வீரமும் உள்ள ஈழவேந்தன் போன்ற தமிழ் அறிஞர்களை ஈழநாட்டு அரசு கௌரவிக்குமா? இல்லை! ஆனால் தமிழ்த்தாய் மன்றம் ஈழவேந்தனுக்கு 'தமிழேந்தல்' எனும் பட்டத்தை வழங்கி பாராட்ட இருக்கிறது.

தமிழ் உணர்ச்சியை ஈழத் தமிழகத்தில் பரப்பும் 'தமிழன் கனவு' என்னும் உணர்ச்சிக் கவிதை நூலை தமிழ்த் தாய் மன்றம் வெளியிட்டு வைத்தது.

ஈழத் தமிழ் இளைஞர்கள் வாழும் இடமெல்லாம் தமிழ் விழாக்களையும் மாநாடுகளையும் நடத்தி தமிழ் உணர்வை நாடு பூராவும் தட்டியெழுப்பும் பெரும் பணியை தமிழ் தாய் மன்றம் மேற்கொண்டு வருகிறது.

ஈழத்தில் சுயாட்சிக் கழகத்திற்கு இந்த அரசாங்கம் கொடுக்காத மரியாதை தமிழ்த்தாய் ம[illegible] அரசாங்கத்தால் [illegible]கிறது.

கொழும்பு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் கூட்டங்கள் நடத்த இடம் கொடுக்கக் கூடாது என்று அரசாங்கத்தின் ஓர் அமைச்சர் சரசுவதி மண்டப உரிமையாளரான இந்துக் கலாச்சார நிலையத் தலைவர் திரு. கே. சி. தங்கராசா அவர்களுக்கு கட்டளை இட்டதனால் இன்று சரசுவதி மண்டபத்தில் தமிழ்த்தாய் மன்றம் கூட்டம் நடத்தத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தாய் மன்றத்தின் காவலர் திரு காசி ஆனந்தன் அவர்களை சி. ஐ. டி. போலீசார் சுற்றி வளைப்பதும் — தொடர்ந்து தொல்லை கொடுப்பதும் சாதாரண அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டிருக்கிறது.

திரு. காசி ஆனந்தன் அவர்களை அழைத்து தமிழ் விழாக்களை நடத்தும் அரசாங்க திணைக்கள ஊழியர்கள் மீது விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

தமிழ்த்தாய் மன்றக் காவலருக்கு இலங்கை வானொலி நிகழ்ச்சிகளில் இடமளிக்கப்படக் கூடாது என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

இத்தனை வேகத்தில் ஈழத் தமிழ் இனத்தின் சொத்தான தமிழையும் — தமிழ்க் கலைகளையும் — தமிழ் பண்பாட்டையும் பேணிப் பாதுகாக்கும் ஒரு பேரியக்கமாக விளங்கிவரும் தமிழ்த் தாய் மன்றத்தை சின்னாபின்னமாகத் தாக்க முயலும் 'தறுதலை' ஏடே! உன் வெங்காய மூளையில் அறிவு வேர் விடும் நாள் எந்நாள்?

சுயாட்சிக் கழகத்தின் வேலை தூய தமிழ்ப் பணியாளர்களை சுரண்டி நையாண்டி வேலை செய்து கொண்டிருப்பது தானா?

சுயாட்சிக் கழகம் இது வரை செய்ததுதான் என்ன?

தறுதலை ஏட்டில் தமிழரசுக் கட்சியைத் தாக்கி விதம் விதமான கட்டுரைகள் எழுதி அதைப் பெரிய வெற்றியாகக் கருதிக் கூத்தாடி மகிழ்வதைத் தவிர சுயாட்சிக் கழகம் இதுவரை உருப்படியாகச் சாதித்தது தான் என்ன?

வைக்கோல் பட்டறை நாய் போல் தாங்களும் ஒரு பணியும் ஆற்றாமல் — அடுத்தவரையும் ஆற்ற விடாமல் குலைத்துக் குலைத்து கூத்தடிப்பதுதானா சுயாட்சிக் கழகத்தின் கொள்கை!

"தறுதலை"க்கு இருப்பது தலையா வெறும் வாய் ஒன்றுதானா?

தறுதலை ஏட்டினரை ஒன்று பணிவுடன் வேண்டுகிறோம். இனியேனும் வாய் கிழிய நாய்போலக் குலைக்கும் வழக்கத்தை நிறுத்துங்கள்!

சுயாட்சிக்காக நீங்கள் நடத்தும் போராட்டத்துக்கோ — சமஷ்டிக்காக தந்தை செல்வா நடத்தும் போராட்டத்துக்கோ — அதைவிட இன்னும் மேலான தமிழர் விடுதலைப் போர் ஒன்றுக்கோ எப்போதும் தமிழ்த் தாய் மன்றம் துணை நிற்கத் தவறாது; மக்களாட்சிப் பண்பின் இலக்கணத்துக்கு அமைய — அறவழியில் — நீங்கள் யார் — தமிழினத்துக்கு — எந்த வெற்றியைத் தேடித்தர எந்த முயற்சியை மேற்கொண்டாலும் நாங்கள் உங்கள் பக்கமே! தமிழையும் தமிழ்க் கலைகளையும் தமிழ்ப் பண்பாட்டையும் அழிப்போருக்கே நாங்கள் எதிரிகள்!

எனவே தமிழரசுக் கட்சியை தாக்குவதையோ — தமிழ்த் தாய் மன்றத்தை தாக்குவதையோ விட்டு — உங்களுக்கென இலட்சியம் ஒன்றிருந்தால் அதை அடையக் கூடுமான முயற்சிகளில் இறங்குங்கள்.

இக்கட்டுரையில் சுயாட்சிக் கழகத்தை தாக்குவது குறித்து உண்மையிலேயே தமிழ்த் தாய் மன்றம் வருந்துகிறது — முன்னை நீங்கள் எங்கள் இதயத்தில் ஏறிவிட்டீர்கள். முள்ளை முள்ளால் எடுத்திருக்கிறோம்; வேறில்லை.

—அண்ணாதாசன்,
கொள்கைபரப்புத்துறைப் பொறுப்பாளர்,
தமிழ்த்தாய் மன்றம்.

## பிரதேசக்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டமாகத் தெரிவித்துள்ளார்;

எனவே தினபதியார் ஒரே பொய்யைத் திரும்பத் திரும்ப சொல்வதால் அது உண்மையாகிவிடமாட்டாது. தமிழரசுத் தந்தைக்கும் கறை ஏற்படுத்திவிட முடியாது. தினபதியார் கூறும் திருகோணமலை மாநாட்டின் பின் கல்முனையிலும் உடுவிலிலுமாக இருமாநாடுகள் நடைபெற்று முடிந்து விட்டன. தினபதியார் இப்போதுதான் பழந்தோம்பு புரட்டி இராசதுரையை பலியாதப்பார்க்கிறார். அதற்கு இராசதுரை இரையாகமாட்டார் என்றே நம்புகிறோம்.

தமிழரசுக்கட்சி தனது பிரச்சினையைத் தானே தீர்த்துக்கொள்ளும். தமிழரசுக் கட்சிக்குள் சிண்டு முடிந்து தமிழ் இனத்தின் ஒற்றுமையை உடைத்தெறிய முயல்பவர்களின் முகத்தில் கரி பூசப்படும். தமிழ்ப்பகைவர்களின் வால் ஒட்ட நறுக்கப்படும். தமிழினத்தின் ஒருமைப்பாடு நிச்சயமாக நிலைநிறுத்தப்படும். தமிழினத்துக்காக தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்த அமரர் வன்னியசிங்கம், இராசவரோதயம் டாக்டர் நாகநாதன், வீ. ஏ. கந்தையா, ஏகாம்பரம், திருமலை நடராசன் போன்ற தியாகிகளின் மீது ஆணையிட்டுக் கூறுகிறோம் — வடக்கும், கிழக்கும் மலையகமும் வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் ஒன்றாகவே இருக்கும்!

## கல்முனை அண்ணா சிலை நிதி
### காவலர் அறிக்கை

"அனைத்திலங்கை தமிழ்க்கலாச்சார இயக்கமான தமிழ்த்தாய் மன்றத்தின் காவலர் திரு. காசி ஆனந்தன் அவர்கள் கல்முனை அண்ணா சிலை நிதி பற்றி சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள அறிக்கை ஒன்றினைக் கீழே தருகிறோம்.

"அண்மையில் வெளியான ஓர்ஏட்டில் 'கல்முனை அண்ணா சிலையின் பெருட்டு தமிழ்த்தாய் மன்றம் கொழும்பில் சொற்பொழிவு நிகழ்ச்சி மூலம் திரட்டிய அண்ணா சிலை நிதி எங்கே? எனக் கேட்டு தமிழ்த் தாய் மன்றத்துக்கு களங்கம் கற்பிக்கும் நோக்கோடு ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளதாக அறிகிறேன்.

ஈழத்தில் ஆட்சியாளர் [illegible] மோதிக்கொண்டு — அறவழியில் நின்று — தமிழ் மொழியும் தமிழ்க்கலையும் பேணிக் காத்திட இன்னல்கள் பல ஏற்று — தொண்டாற்றி வரும் ஈழத்தின் ஒரே ஒரு தூய தமிழ்ப் பண்பாட்டுக் கழகமான தமிழ்த்தாய் மன்றத்தை தாழ்வுபடுத்த நினைத்த அவ்வேட்டின் போக்கினை எண்ணி மனம் வருந்துகிறேன்.

கல்முனை அண்ணா சிலைக்கு திரட்டிய நிதி "அண்ணா சிலை நிதிக்குழுவினர்" கையில் ஒப்படைக்கப் பட்டுவிட்டது என்பதையும் அந்த நிதி வேறு எக்காரணத்திற்கும் பயன்படுத்தப்படவில்லை என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவ்வாறு அண்ணா சிலை நிதி வேறு எந்த நோக்கத்துக்கும் பயன்படுத்தப்பட்டிருக்குமானால் நிரூபித்துக்காட்டுங்கள் பார்க்கலாம் என்று அவ்வேட்டினரை வேண்டுகிறேன்."

## விபுலானந்தருக்கு முத்திரை வேண்டாம்!

புளியந்தீவு இந்துசமய விருத்திச்சங்கத்தின் கூட்டம் சென்ற 26-12-71 ஞாயிற்றுக்கிழமை கூடியபோது பின்வரும் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், அமைச்சர் குமாரசூரியருக்கு அவை அனுப்பிவைப்பதெனவும் முடிவாக்கப்பட்டது.

1. பத்திரிகைத் தடை என்ற பாதகமான சட்டம் தமிழ் நாட்டிலிருந்து வரும் சைவசமய அறிவு நூல்களையும், பத்திரிகை சஞ்சிகைகளையும் தடை செய்யுமாதலால் பத்திரிகைத் தடையை நீக்கி விடவும்.

2. சுவாமி விபுலானந்தருக்கு முத்திரை வெளியிட வேண்டாம். ஏனென்றால், ஆறுமுகநாவலருக்குக் கௌரவம் கொடுப்பதற்காக முத்திரை வெளியிடப்படுகிறதென்றதன் பேரில் இந்நாட்டுச் சைவமக்கள் ஏமாற்றப்பட்டுவிட்டார்கள். நாவலரின் முத்திரைகள் இந்த நாட்டில் எத்தனை நாட்கள் விற்கப்பட்டன? குறிப்பாக மட்டக்களப்பில் சில தினங்களுக்கு மேல் நாவலர் முத்திரை கிடைக்கவில்லை; எருமைமாட்டு முத்திரையே கிடைத்தது.

இறைச்சி கேட்கும் நாய்க்கு எலும்புத்துண்டை கொடுத்து ஏமாற்றுவது போன்ற முத்திரை வெளியீட்டின் மூலம் ஏமாற்றக் கூடாது. இந்த நிலைதான் சுவாமி விபுலானந்தர் முத்திரையிலுமானால் அவருக்கு அத்தகைய முத்திரை வெளியீடு தேவையில்லை. நிறுத்தவும். முத்திரையைக்காட்டி சைவ சமயிகளை ஏமாற்ற வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலோன் என்டடெயின்ஸ்மென்ட்ஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது



2வது வெற்றி மாதமாக

செண்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்)

நடிகர் திலகத்தின் 150வது வெற்றிச் சித்திரம்

சிவாஜி, ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார்
விஜயகுமாரி, முத்துராமன், டி.கே.பகவதி
வி. எஸ். ராகவன் நடிக்கும்

(ஈஸ்மன் கலர்) சவாலே சமாளி

---

சிலோன் தியேட்டஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது

3வது வாரமாக காட்சி தருகின்றது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) நெல்சன் (திருமலை) இம்பீரியல் (மட்டுநகர்)

சிவாஜிகணேசன், ஜெயலலிதா, நாகேஷ்,
மற்றும் பலர் நடித்த

சுமதி என் சுந்தரி

---

சினிமாஸ் திரைகளில் காட்சியளிக்கின்றது



2வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ் நகர்) — லிடோ (யாழ் நகர்)

சிவாஜி, பத்மினி, ஸ்ரீகாந்த்,
தங்கவேலு நாகேஷ், ராகவன்,
—நடித்த— சிவாஜி பிலிம்ஸ்

வியட் நாம் வீடு



2வது வெற்றி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) — விஜயா (மட்டுநகர்)



ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ
அசோகன் — சாவித்திரி
நாகேஷ்
நடித்த

மனசாட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1972-ம் வருடம் ஜனவரி மாதம் 23-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவை மகேசன்